# தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழா

## சட்டமன்றப் பேரவை வைர விழா



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்

## சென்னை

அச்சுக்கோர்வை : **ரிப்ளிக்கா,** சென்னை - 600 004.

அச்சிட்டோர் : **மல்டி விஸ்டா க்ளோபல் லிமிடெட்,**
வேளச்சேரி, சென்னை - 600 042.

© **தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்,** சென்னை

# தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழா

# சட்டமன்றப் பேரவை வைர விழா

14-7-1997

சென்னை



The Government House, Fort St. George

**Engraved by Thomas & William Daniell, 1798**





''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.''



மேதகு நீதிபதி செல்வி எம். பாத்திமா பீவி
ஆளுநர்



மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி
முதல் அமைச்சர்



மாண்புமிகு திரு.பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்
பேரவைத் தலைவர்



நீதிபதி திரு. மன்மோகன் சிங் லிபர்ஹன்
சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி



மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்
பேரவை முன்னவர்



திரு. சோ. பாலகிருஷ்ணன்
எதிர்க்கட்சித் தலைவர்



மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி
பேரவைத் துணைத் தலைவர்



தமிழ்நாடு அமைச்சரவை -- *13-5-1996*

அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்) : திரு. கே.என். நேரு, டாக்டர் க. பொன்முடி, திரு. துரைமுருகன், திரு. ஆற்காடு நா. வீராசாமி, பேராசிரியர் க. அன்பழகன், மேதகு டாக்டர் எம். சென்னா ரெட்டி (ஆளுநர்), கலைஞர் மு. கருணாநிதி (முதலமைச்சர்), திரு. நாஞ்சில் கி. மனோகரன், திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. கோ.சி. மணி, முனைவர் மு. தமிழ்க்குடிமகன், திரு. க. சுந்தரம்

நிற்போர் (இடமிருந்து வலம்) : திருமதி எஸ். ஜெனீபர் சந்திரன், திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன், திரு. என். சுரேஷ் ராஜன், திரு. அந்தியூர் ப. செல்வராசு, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், புலவர்

... திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, திரு. வ. முல்லை வேந்தன், திரு. ஆலடி அருணா, திரு. அ. இரகுமான்கான், திரு.

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 05.07.1997

இந்திய சுதந்திரத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்கள் தொடங்கப்படவிருக்கும் வேளையில் தமிழ்நாடு சட்டமன்றத்தின் பவள விழாவும், பேரவையின் வைர விழாவும் நிகழ்வது நிறைந்த மகிழ்ச்சியைத் தருவதாகும்.

இன்றைய இந்திய பாராளுமன்ற நடைமுறைகள் இங்கிலாந்து பாராளுமன்ற அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருப்பினும், அவை பண்டைய தமிழகத்தில் நிலவிய குடவோலை ஆட்சி முறை எதிரொலிக்கக் கூடிய குடியாட்சித் தத்துவங்களை வேர்களாகக் கொண்டுள்ள பாங்கினை எண்ணி எண்ணித் தமிழ் மக்கள் அனைவரும் இன்புறலாம்.

இந்திய நாட்டுச் சட்டமன்ற வரலாறு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1833-ஆம் ஆண்டில் தொடங்கியது. அப்போது நியமன உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் இடம் பெற்றிருந்தனர். 1919-ஆம் ஆண்டில் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் இயற்றப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மூலம்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்நாளைய மாகாண சட்டமன்றங்களில் முதன்முதலாக இடம் பெறத் தொடங்கினர். அச்சட்டமே பின்னர் மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் உருவாவதற்கு வழிகோலியது.

அந்தச் சட்டத்தின்படி சென்னை மாகாண மன்றத்திற்கு 1920-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ஆம் நாள் நிகழ்ந்த முதல் பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி திரு. சுப்பராயலு ரெட்டி தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அமைச்சரவை பொறுப்பேற்றது.

1921-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பன்னிரெண்டாம் நாள் கன்னாட் கோமகன் அவர்களால் முதல் மாகாண சுயாட்சிச் சட்டமன்றம் தொடங்கி வைக்கப்பட்டது. அதன் பவள விழா நிகழ்ச்சியும்,

அதேபோல 1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் முதன்முதலாக 1937-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஏற்படுத்தப்பட்ட சென்னை சட்டமன்றப் பேரவையின் வைர விழா நிகழ்ச்சியும் தற்பொழுது தமிழக அரசினால் ஒருசேர சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இத்தகைய நெடிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ள தமிழ்நாடு சட்டமன்றம் உருவாக்கிய பல்வேறு சட்டங்களும் தனித் தீர்மானங்களும் மக்களிடையே சமுதாயப் பொருளாதாரச் சமத்துவத்தை உருவாக்கிட வகுக்கப்பட்ட திட்டங்கள் பலவும் தமிழகத்தின் ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்குவதுடன் இந்திய நாடு முழுமைக்குமே வழிகாட்டத் தக்கனவாய் அமைந்துள்ளன என்பதையும் பெருமையுடன் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் - சென்னை மாநிலத்திற்கு ''தமிழ்நாடு'' எனப் பெயர் சூட்டி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தனித் தீர்மானம் நிறைவேற்றியது;

சுயமரியாதை மற்றும் சீர்திருத்த திருமணத்தைச் செல்லுபடியாக்கிடச் சட்டம் வகுத்தது;

தமிழை ஆட்சிமொழியாக்கி - மும்மொழித் திட்டத்தை நிராகரித்து தமிழகத்தில் இருமொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது;

நிலச் சீர்திருத்த (உயர் அளவைக் குறைத்தல்) சட்டம் உருவாக்கியது;

தொழிலாளர் நலம் காத்து அவர்கள் உழைப்பை, தியாகத்தை மதித்துப் போற்றிடும் வகையில் மே தினத்தை அரசு விடுமுறையாக்கிட வழி வகுத்தது;

குடியிருப்பு மனைச் சட்டம் நிறைவேற்றியது;

குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் போன்ற அமைப்புகளை உருவாக்கச் சட்டம் வகுத்தது;

மாநில சுயாட்சிக்கான தீர்மானம் நிறைவேற்றியது;

வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைத்திட சட்டம் வகுத்தது;

கால்நடைப் பல்கலைக்கழகம் உருவாக்கிட சட்டம் நிறைவேற்றியது;

உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் எனச் சட்டமியற்றி முதன்முதல் நடைமுறைப்படுத்தியது நமது சட்ட மன்றமே;

பெண்களுக்குச் சொத்தில் உரிமை வழங்கிட சட்டம் கண்டதும் இந்தச் சட்டமன்றமே;

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் அமைத்திட சட்டம் நிறைவேற்றியது;

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றியது;

கேலி வதை செய்தலைத் தடுத்திடும் சட்டம் நிறைவேற்றியது;

1952-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ஆம் நாள் முதல் 72 உறுப்பினர்களைக் கொண்டு செயல்படத் தொடங்கிய தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் அறிஞர் பெருமக்களும் சான்றோர் பலரும் அமர்ந்து அரிய பல கருத்துக்களை வழங்கி அரசினை நல்வழியில் செலுத்திட உறுதுணை புரிந்த அத்தகைய வரலாற்றுச் சிறப்புக்குரிய மேலவை 1986-ஆம் ஆண்டு நீக்கப்பட்டாலும், இம் மேலவையின் மாண்பினையும் வரலாற்றுச் சிறப்பினையும் கருத்தில் கொண்டு, மேலவையை மீண்டும் அமைத்திட தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசின் ஒப்புதலைப் பெற வழி கோலியது இந்த மாமன்றமே.

இவை போன்ற எண்ணற்ற சரித்திரச் சாதனைகளை சாமானியர்களும் பெற்றிட சட்டம் உருவாக்கி, ஏனைய பிற மாநிலங்களுக்கு முன்னோடியாய், இந்திய நாட்டிற்கு வழிகாட்டியாய் தமிழகம் திகழ்ந்திட இந்த மாமன்றத்தின் பணி மகத்தானது என்றால் அது மிகையாகாது.

இத்தகைய பெருமைகளையும், பண்பாட்டு மரபுகளையும் கொண்டுள்ள தமிழ்நாடு சட்டமன்றத்தில் நாட்டு மக்களின் நலம் ஒன்றே பெரிதெனக் கருதி அயரா அரும் பணியாற்றி, நல்ல பலச் சிறப்புகளை நமக்கு விட்டுச் சென்றுள்ள முன்னோர்களை, தியாக சீலர்களை நன்றிப் பெருக்குடன் நினைவு கூர்ந்து, அப்பெருமக்கள் காட்டிய வழி நின்று மக்களாட்சி முறையின் மாண்புகளைக் காத்திட தமிழ்நாடு சட்டப் பேரவையின் அரும்பெரும் பணிகள் தொடர்ந்திடவும் இந்த வேளையில், சட்டமன்றத்தின் பவள விழாவும், பேரவையின் வைர விழாவும் வெற்றியுடன் நிகழ்ந்திட என் இனிய நல் வாழ்த்தினை வழங்குகிறேன்.

அன்புள்ள

(மு. கருணாநிதி)

सत्यमेव जयते

राष्ट्रपति
भारत गणतंत्र

**PRESIDENT**
**REPUBLIC OF INDIA**



## MESSAGE

As vibrant institutions which represent our democratic ethos, the Tamil Nadu Legislature and the Legislative Assembly, have shaped and guided the progress and development of the State. The debates and discussions in these institutions have imparted resilience to our democratic processes and safeguarded and advanced the interests of the people of Tamil Nadu.

On the occasion of the Platinum Jubilee celebrations of the Tamil Nadu Legislature and the Diamond Jubilee celebrations of the Tamil Nadu Legislative Assembly on 14th July, 1997, I extend my best wishes and felicitations to the people of the State and their elected representatives.

S. D. Sharma
(SHANKER DAYAL SHARMA)

New Delhi,
July 7, 1997



उप-राष्ट्रपति, भारत
नई दिल्ली-110011

VICE-PRESIDENT
INDIA
NEW DELHI - 110011

July 10, 1997

# M E S S A G E

I am glad to know that the platinum Jubilee of the Tamil Nadu Legislature and the diamond jubilee of the Tamil Nadu Legislative Assembly are being celebrated on 14th July, 1997 at Chennai.

Parliamentary institutions constitute the head and front of our body politics. In order to effectively realise democracy in practice at the grass roots level these institutions have to respond more vigorously to the needs and aspirations of the common citizens. Through decades of dedicated work the Tamil Nadu Legislature and the Tamil Nadu Legislative Assembly have rendered valuable service to the people and are justly proud of its democratic achievments. I am confident that these two institutions will rededicate themselves to the task of strengthening and enriching our democracy.

I have great pleasure in sending my good wishes for the success of the jubilee celebrations.

(K.R. NARAYANAN)





THE
CONSTITUTION OF INDIA

WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizens:

JUSTICE, social, economic and political;

LIBERTY of thought, expression, belief, faith and worship;

EQUALITY of status and of opportunity;

and to promote among them all

FRATERNITY assuring the dignity of the individual and the unity of the Nation;

IN OUR CONSTITUENT ASSEMBLY this twenty-sixth day of November, 1949, do HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.



सत्यमेव जयते

अध्यक्ष लोक सभा
SPEAKER LOK SABHA



**2 Jul 1997**

## Message

I am happy to learn that the Platinum Jubilee Celebration of the Tamil Nadu Legislature and the Diamond Jubilee Celebration of the Tamil Nadu Legislative Assembly are scheduled to be held on 14th July 1997 at the Madras University Centenary Auditorium, Chennai and to mark the occasion, a commemorative Souvenir is proposed to be released.

Tamil Culture is rooted on democratic values dating back to very ancient times, even from "Sangam" period.

The tradition of the Tamil Nadu Legislature and of the Legislative Assembly has been one of the highly enlightened and orderly conduct of business, always directed to one basic objective - that of the betterment of the common man.

I offer my heartiest felicitations for the Platinum Jubilee of the Tamil Nadu Legislature and Diamond Jubilee of the Tamil Nadu Legislative Assembly.

(Purno A: Sangma)



# On Democracy
# - Anna

Society today needs guidance in every field, especially in the political field. I know full well that when I talk to you about political field, I do not mean to make a reference to any one of the political parties. Far from that, though a political party man myself, I am more concerned with politics in a general way than with party politics in particular. There is enough time for party politics. But today and in this sanctified hour, on this auspicious occasion, I am not indulging in party politics when I say that your guidance is needed for the country.

Rightly or wrongly, I hope rightly and not wrongly, we have chosen democracy to be our way of life, and, if democracy is to succeed, we should not lull ourselves into thinking that once the democratic apparatus is built up and given to us, everything will be rosy, everything will be happy and everything hopeful. Not at all. Apparatus is one thing but the spirit and generating force for that apparatus is an entirely different thing. In our country we have a fine political or democratic apparatus. I mean our general elections, which we conducted for the fourth time successfully. For democracy that apparatus is needed. But that apparatus by itself is not democracy. We should have the generating force. To make the apparatus produce the best results I expect students from Loyola College and from other colleges to generate force, enough economic current, enough democratic spirit, so that we can maintain this democratic apparatus intact.

I do believe in democracy, but democracy does not merely consist in having a democratic machinery. Far more important than that is the democratic spirit which can be generated and cultivated by colleges like Loyola College, where you come across world thoughts and world sentiments, where you read about the rise and fall of various empires, of various countries, the construction and destruction of various movements, the origin of various philosophies. Having taken for ourselves the responsibility of running democracy we should see to it that democracy is run on very sound principles. Democracy believes in human dignity; it gives enough opportunities to every individual and that is why in democracy very often we hear the three words, liberty, equality and fraternity. And even equality we have to qualify. To give equal opportunity for all, you should recognize and give due regard and respect to our fellow human beings. To give respect to your fellow human beings you should be perfectly conscious of the fact that there is no inherent inequality between this individual and that individual.

Bishop Arulappa will agree with me when I say that 2000 years ago we Tamils had such a salubrious principle inculcated in our hearts to be expressed in each of our deeds. But afterwards, at a very sorrowful period, we entered into an age of ignorance. We forgot what was entirely ours. We became a society divided into water tight compartments. I am referring to the caste system. Democracy cannot co-exist with caste system, because caste does not believe in human dignity. It does not make us think that we should give due respect to other men. Therefore, only with regard to safeguarding of democracy I want this caste system and the spirit behind it to be annihilated. Where else can I go except to Loyola College and other colleges to recruit doughty warriors for this modern crusade by which to destroy the hydra – headed monster called caste so that democracy can become safe and sound, successful and fruitful in our country?

I have great hopes about the future of this country. Only because I have great confidence in every one of you that I am emboldened to take up the responsibility of running this administration because believe me, when I say, that I am a common man called upon to perform uncommon tasks. Therefore, unless entire society feels the responsibility and stands by me, I do not think that I can register any great success. Therefore I have come to make this appeal to you on behalf of society, on behalf of the country, and above all on behalf of humanity and democracy. This appeal is issued by me with the fullest faith and robust optimism and hope to an audience which knows how to receive appeals and respond to it and carry this message of service.

Thank you.

*Excerpts from the Speech of Hon. Chief Minister at Loyola College in 1967*

# காண்பவை

## விழாக் குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| மாண்புமிகு பேரவைத் தலைவர் | - தலைவர் |
| மாண்புமிகு முதலமைச்சர் | - உறுப்பினர் |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | - உறுப்பினர் |
| மாண்புமிகு திரு. கோ. சி. மணி | - உறுப்பினர் |
| மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் | - உறுப்பினர் |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | - உறுப்பினர் |
| மாண்புமிகு திரு. கே. என். நேரு | - உறுப்பினர் |
| மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி | - உறுப்பினர் |

### விழாக் குழு அமைப்பாளர்கள்

திரு. டி. சாலமன் ஜெயபால், சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. எஸ். ராஜரத்தினம், செய்தி மற்றும் சுற்றுலாத் துறைச் செயலாளர்

## மலர்க் குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| மாண்புமிகு பேரவைத் தலைவர் | - தலைவர் |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | - உறுப்பினர் |
| மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் | - உறுப்பினர் |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | - உறுப்பினர் |
| மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் | - உறுப்பினர் |
| மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் | - உறுப்பினர் |
| மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன் | - உறுப்பினர் |
| மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு | - உறுப்பினர் |

### மலர்க் குழு அமைப்பாளர்

திரு. வி. இறையன்பு, செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்

## கட்டுரைகள்


| | | |
|---|---|---|
| சட்டப் பேரவையில் கலைஞர் | 1 | மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் |
| மக்கள் நாடும் அரசு மருத்துவர் எப்படி இருக்க வேண்டும்? | 5 | மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி |
| ஜனநாயக தத்துவத்தின் தோற்றமும் பரிணாம வளர்ச்சியும் | 8 | மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் |
| நான் அறிந்த பேரவைத் தலைவர்கள் | 11 | மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் |
| வளர்ச்சிப் பணிகளின் அச்சாணி உள்ளாட்சி அமைப்புகளே | 15 | மாண்புமிகு திரு. கோ.சி. மணி |
| வேளாண் வளர்ச்சியில் அரசு மானியங்களின் பங்கு | 20 | மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் |
| ஆற்று நீரும் ஊற்று நீரும் தமிழகத்திற்குத் தந்த ஏற்றம் | 23 | மாண்புமிகு திரு. துரைமுருகன் |
| அவையில் பதற்றம் தணிவித்தல் | 27 | மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் |
| ''தனி ஒருவர்க்கு உணவில்லையெனில்'' | 29 | மாண்புமிகு திரு. கே.என். நேரு |
| குடிசையிலிருந்து அடுக்குமாடிக் குடியிருப்புக்கு | 32 | மாண்புமிகு திரு. க. சுந்தரம் |
| தொழிலகங்களில் மனித நாட்கள் இழப்பினைத் தவிர்ப்பது எப்படி? | 34 | மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் |
| தமிழகத்தில் வணிக வரிகள் வரலாறு | 37 | மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் |
| குடவோலையில் பிறந்த ஜனநாயகம் | 40 | மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் |
| பெரியாரின் நோக்கில் பெண்களின் உரிமைகள் | 46 | மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன் |
| நிலைக் கண்ணாடி | 49 | மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி |
| Scope for Legislation in Transport Sector | 51 | Hon. Thiru. T.G. Venkataraman |
| விழிப்புணர்ச்சியே வெற்றி தரும் | 53 | மாண்புமிகு திரு. என்.வி.என். சோமு |
| Petroleum Industry in Tamil Nadu | 56 | Hon. Thiru. T.R. Baalu |
| நிழலாடும் எனது சட்டமன்ற நினைவுகள் | 60 | மாண்புமிகு திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் |
| மாறி வருகின்ற சூழ்நிலைகளும் சட்டமன்ற உறுப்பினர்களும் | 65 | திரு. ஜி.கே. மூப்பனார் |
| பேரவையும் பேரவைத் தலைவரும் – என் அனுபவங்கள் | 67 | திரு. க. இராசாராம் |
| பேரவைத் தலைவராய் என் அனுபவங்கள | 71 | திரு. முனு ஆதி |

| | | |
|---|---|---|
| பல தலைவர்களிடம் நான் கற்ற அரசியல் பாடம் | 73 | திரு. சோ. பாலகிருஷ்ணன் |
| சட்டமன்றமும் உள்ளாட்சி மன்றமும் | 75 | திரு. மு.க. ஸ்டாலின் |
| தமிழக சட்டமன்றத்தில் சிறுபான்மையினர் பங்கு | 78 | திரு. எம்.ஏ. லத்தீப் |
| ஆட்சி முறையில் சட்டமன்றக் குழுக்களின் சீரிய பங்கு | 81 | திரு. கே.எஸ். அழகிரி |
| பொன் மலர்கள் | 84 | டாக்டர் காஞ்சனா கமலநாதன் |
| சட்டமன்றம் – சில நினைவுகள் | 88 | திரு. சி. சுப்ரமணியம் |
| சட்டமன்றப் பேச்சு | 94 | திரு. டி. செங்கல்வராயன் |
| பாராளுமன்ற ஜனநாயகத்தில் பண்பாடு | 96 | டாக்டர் இரா. நெடுஞ்செழியன் |
| சட்டமன்றத்தில் திராவிட இயக்கத்தின் சாதனைகள் | 99 | திரு. எஸ்.டி. சோமசுந்தரம் |
| தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலர் அண்ணா | 102 | திருமதி சத்தியவாணி முத்து |
| முயன்றார் – முடியவில்லை! | 104 | திரு. ப. உ. சண்முகம் |
| வறுமை ஒழிப்பில் சட்டமன்றத்தின் பங்கு | 105 | திரு. ச. இராமச்சந்திரன் |
| சட்டமியற்றல் – ஒரு கண்ணோட்டம் | 107 | திரு. செ. மாதவன் |
| நெஞ்சில் நிற்கும் பேரவை நிகழ்ச்சிகள் | 109 | திரு. இராம வீரப்பன் |
| *Sine Qua Non* of a Successful Legislator | 112 | Dr. H.V. Hande |
| அண்ணா விரும்பிய சமுதாயம் | 116 | திரு. அரங்கண்ணல் |
| சட்டமன்றத்தில் சிறப்பாகப் பேசுவது எப்படி? | 118 | திரு. குமரி அனந்தன் |
| சட்டமன்றத்தில் தமிழ் | 122 | டாக்டர் தி. முத்துக்கண்ணப்பன் |
| தமிழக சட்டமன்றத்தில் ஆசிரியர்கள் | 125 | திரு. கே.எஸ். கணபதி |
| சுற்றுச் சூழல் பிரச்சினைகள் | 127 | திரு. ப. மாணிக்கம் |
| அண்ணா – ஒரு பாராளுமன்றவாதியாக, ஆட்சியாளராக | 129 | திரு. அ.க.அ. அப்துஸ் ஸமத் |
| ஓய்வு பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களின் சமுதாயப் பங்கு | 133 | திரு. ஆர். நாகசுந்தரம் |
| சட்டமன்ற உறுப்பினராகச் சிறப்பாகச் செயல்படுவது எப்படி? | 135 | திரு. க. சுப்பு |

| | | |
|---|---|---|
| அண்ணா காண விரும்பிய ஜனநாயகம் | 139 | டாக்டர் கோ. சமரசம் |
| சட்டங்களால் தீண்டாமை ஒழியுமா? | 141 | திரு. இல. இளையபெருமாள் |
| Towards a Cleaner Administration | 142 | Justice Thiru G. Ramanujam |
| Legislative Support for Consumer Protection | 145 | Justice Thiru S.A. Kader |
| Departmentally - Related Subject Committees | 148 | Thiru D. Solomon Jeya Paul |
| Legislature Reporting | 151 | Thiru M.E. Duraipandiyan |
| Presidential Election 1997 | 154 | Thiru D. Sundararajalu |
| My days as Legislature Secretary - A Journey Down the Memory Lane | 156 | Thiru Te. Hanumanthappa |
| நெஞ்சில் நீங்காத நினைவுகள் | 158 | திரு. சி.டி. நடராசன் |
| சட்டப் பேரவைச் செயலாளர் | 162 | திரு. சி.கு. இராமசாமி |
| மலரும் நினைவலைகள் | 164 | திரு. த.ப. டில்லிதுரை |
| My Days as Legislature Secretary | 167 | Thiru C.S. Janakiraman |
| My Days in Legislature Secretariat | 170 | Thiru P. Pallikonda Perumal |
| தமிழக உள்ளாட்சித் தேர்தல்கள் – ஒரு கண்ணோட்டம் | 173 | திரு. கே. மலைச்சாமி |
| The Legislature and the Bureaucracy | 178 | Thiru V. Karthikeyan |
| Interaction between the Legislature and the Executive - How Effective? | 180 | Thiru P. Sabanayagam |
| Legislation - Boon or Bane for Religious Institutions | 182 | Selvi M.S. Ramesh |
| Legislation on Abolition of Child Labour | 187 | Thiru R. Varadarajulu |
| ஆறிலும் கல்வி, நூறிலும் கல்வி – திறந்த நிலைப் பல்கலைக் கழகங்கள் | 191 | டாக்டர் வா.செ. குழந்தைசாமி |
| வைர விழா காணும் சட்டமன்றம் | 194 | திரு. மு. ஆறுமுகப்பெருமாள் |
| What is expected of a Legislature Reporter? | 198 | Thiru M. Srinivasalu |
| Tamil Nadu Legislature Library - A Bird's-eye View | 200 | Thiru V. Ashok |
| The Role of Women in the Madras Legislative Council (1921-1986) | 203 | Prof. B. Ramanathan |
| ''பவள விழா'' காணும் தமிழக சட்டமன்றம் | 205 | திரு. டி.வி. ரங்கசுவாமி |

# சட்டப் பேரவையில் கலைஞர்

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்
கல்வி அமைச்சர் - பேரவை முன்னவர்

தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு 1957 ஆம் ஆண்டு முதல் போட்டியிட்ட ஒவ்வொரு தேர்தலிலேயும் வெற்றி பெற்று, சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும், ஆளுங்கட்சி முதல்வராகவும் பலமுறை அமர்ந்து முப்பது ஆண்டுகட்கு மேல் மன்றத்தில் பங்குபெற்ற பெருமைக்குரியவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களாவார்கள்.

கலைஞருடைய பொதுவாழ்விலும், அரசியல் பணியிலும், ஜனநாயகக் கடமை ஆற்றுவதிலும், சட்டப் பேரவைப்பணி பெரும்பங்கு வகிக்கிறது. சிறுகதை, புதினம், மடல், நாடகம், திரைப்படம், புதுக் கவிதை முதலான பலவகை எழுத்தாற்றலிலும், பொதுக்கூட்ட மேடை, இலக்கிய மேடை, கவியரங்கு, சட்டமன்றம் முதலான அனைத்து மேடைகளிலும் அது அதற்குரிய நடைநலன் காட்டிப் பேசுவதிலும் வல்லவராக விளங்குபவர் கலைஞர். நுண்ணறிவாளரும், பலதுறை விற்பன்னருமாகிய கலைஞர் சட்டமன்றத்தில் விவாதிப்பதிலும், விடையளிப்பதிலும், அனைவரிலும் மேம்பட்டவராகவே விளங்குகிறார். கலைஞர் எந்தப் பொறுப்பை ஏற்றாலும், அதை முழுமையாக நிறைவேற்றாது குறைபாடுடையதாக விடமாட்டார்; பிறர் குறை காணவோ, சொல்லவோ இடந்தரமாட்டார்.

அவர் சட்டப்பேரவையில் உறுப்பினராகவோ, அமைச்சராகவோ இடம் பெற்றிருந்த காலத்தில் தவிர்க்க முடியாத வேறு கடமை இருந்தாலன்றி வரத் தவற மாட்டார். பேரவை தொடங்கச் சில விநாடிகள் முன்னதாகவே வந்து அமர்வார். அந்த நாள் நிகழ்ச்சி முடிவுறும் வரையில், இன்றியமையாத கடமைக்காக வெளியில் சென்று வருவதன்றி, மற்ற பொழுதெல்லாம் அவையிலேயே இருந்து அனைவரது கருத்தையும் கேட்பார். முதலமைச்சர் என்னும் பொறுப்பினால் அனைத்துத் துறை பற்றியும் எழக்கூடிய கேள்விகள், ஐயுறவுகட்குத் தகுந்த விளக்கம் தரக்கூடியவராகவே இருப்பார். துறை பொறுப்பில் உள்ள அமைச்சர்கள் பேசும் போதும், தேவையான திருத்தத்தை அந்தந்தக் கட்டத்திலேயே விளக்கியுரைப்பார். அவையில் அவர் அமர்ந்துள்ள நிலையில், எதிர்க்கட்சியினரோ - ஆளுங்கட்சியினரோ உரையாற்றுகையில் அவர்தம் உரையில் அமையும் பொருந்தாக் கூற்றுக்களையோ, உண்மைக்கு மாறான செய்திகளையோ அவ்வப்போது அடக்கமாகவும், நகைச்சுவை தோன்றவும்

எடுத்துக்காட்டி, அவையில் சிரிப்பொலியும் கலகலப்பும் ஏற்படச் செய்வதிலும் வல்லவர். ஒருவகையில் அவையின் தலைவராக யார் அமர்ந்திருப்பினும், அவையின் நிகழ்ச்சிகள் பயனுள்ளதாகத் திகழ ஏதுவான குறிப்புக்களை இடையிடையே வழங்கும் பொறுப்பாளராகச் செயற்படுவார்.

கேள்வி நேரத்தில் எந்தத் துறை குறித்து எழுப்பப்படும் வினாக்களாயினும் விடை அளிக்கும் போது, அந்த மூல வினாவிலிருந்து எழக்கூடிய துணை வினாக்கள் எவையாக இருக்கலாகும் என்று முன்னதாகவே எதிர்பார்த்து, விளக்கமான விடைகளைப் பெற்று அவற்றையும் முழுமையாக விளக்கி உரைப்பது அவர் கைக்கொள்ளும் முறையாகும்.

நாட்டு நடப்பு, அரசின் கடமை, துறைகளின் பணி முதலானவை பற்றி உண்மையான தகவலை மன்ற உறுப்பினர்கள் பெறுவதற்காகவே கேள்வி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தக் கேள்வி - பதில் கொண்டே மக்கள் உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்புப் பெறுகின்றனர் என்பதையும், கேள்வி நேரம் பேரவையின் செயற்பாட்டில் தலையாய நேரமாக மதிக்கப்படுவது என்பதையும் உள்ளங்கொண்டு அதில் மிகுந்த கவனமுடன் விடைகளைத் தெரிவிப்பார். விடை அளிக்கும் போது அதில் சொற்சுவை, பொருட்சுவை தோன்றக் கூறுவது அவரது முறை. சட்டப் பேரவையில் எதிர்க்கட்சியில் இருந்து பேசியபோதும் ஆளுங் கட்சியில் இருந்து பேசிய காலத்திலும், எந்தத் துறைபற்றிய விவாதமாயினும் அது குறித்து அறிய வேண்டியவற்றை எல்லாம் சேகரித்து, விவரங்களை வகைப்படுத்தி தகுந்த சான்றுகள், புள்ளி விவரங்கள் தந்து பேசுவதை அவர் முறையாகக் கொண்டுள்ளார். விவரம் தெரியாமலோ, விளக்கம் இன்றியோ அவர் பேசுவதில்லை. எதிர் வரிசையில் இருந்து அமைச்சர் அல்லது முதலமைச்சர் மீது ஏதேனும் குற்றச்சாட்டு சொல்லவேண்டிய நிலை ஏற்படுமானால், அந்தக் குற்றச்சாட்டுக்கு உரிய ஆதாரங்களை ஆராய்ந்து பார்த்து வகைப்படுத்திக் கொண்டுதான் பேசுவார். ஆராய்ந்து பார்க்காமலோ, பொறுப்பு ஏற்காமலோ உண்மைக்குச் சான்று இல்லாமலோ அவர் குற்றஞ்சாட்டத் தலைப்பட்டதில்லை.

கலைஞர் அமைச்சராகவும் முதல்வராகவும் இருந்த நிலையில் மாற்றுக் கட்சியினர் தம்மீது குற்றஞ்சாட்டுவதெனில் எப்படிப்பட்ட பொறுப்பை ஏற்றுப் பேசவேண்டும் என்று விரும்புவாரோ, அதேபோன்று தாம் பொறுப்பேற்றுக் கொண்டவராகவே அவையில் ஒரு குற்றச்சாட்டைக் கூறத் தலைப்படுவார். அவர் எடுத்து வைத்தக் குற்றச்சாட்டுகள் உண்மை அல்ல என்று, எந்நாளும் நிலை நாட்டப்பட்டதில்லை.

குறிப்பாக நம் நாட்டு மக்கள் ஜனநாயகப் பாதையில், ஜனநாயக அமைப்புக்களைக் கொண்டு அவற்றில் நம்பிக்கை வைத்து நடைபோட்டாலன்றி பல்வேறு இன-மொழி மதவேறுபாடுகளும் ஒருவருக்கொருவர் அவநம்பிக்கையும் கொண்டுள்ள நிலையில், ஒற்றுமையும் அமைதியும் நிலைப்பது கடினம் என்பதை உள்ளங்கொண்ட கலைஞர், மக்கள் நம்பிக்கை கொள்ளத்தக்க அளவுக்குச் சட்டப்பேரவை ஒழுங்காகவும் கட்டுப்பாட்டுடனும் செயற்படுவதற்கு ஏற்ற வகையில் பொறுப்புடன் வழி நடத்தி வருகிறார். எதிர்க்கட்சிகள் பலவாகலின் அவர்கள் பேசுவது மக்களிடையில் நிலவும் பல்வேறு எண்ணங்களையும் வெளிபடுத்துவதற்கு ஏதுவாகும் என்பதையும், அவைகட்கெல்லாம் தகுந்த விடையளிப்பதின் மூலமே அரசினைப் பற்றி மக்கள் தெளிவடைய முடியும் என்பதையும் கருதியே ஆளுங்கட்சியினருக்கு ஒதுக்கப்படும் நேரத்தைவிட அதிகமான நேரத்தை, எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் பேசுவதற்கு ஒதுக்கச் செய்து சட்டப்பேரவையில் ஜனநாயக் குரல் நிறைவாக ஒலித்திட இடமளிப்பதற்குத் துணையானவர் கலைஞர்.

கலைஞர் நிதிப் பொறுப்பை ஏற்றிருந்த காலத்தில் சட்டப் பேரவையில் ஆண்டுதோறும் அவர் கொண்டுவந்து நிறைவேற்றிய நிதிநிலை அறிக்கை ஒவ்வொன்றும், ஒரு தனி முத்திரை பொறித்ததாகும். நாட்டு நிலையை விளக்கி, அடிப்படைத் தொழில்களின் வளர்ச்சியை விவரித்து, மக்கள் நலன் காத்து வளர்க்கும், கல்வி, நல்வாழ்வு, சமூகநலன் முதலான துறைகளில் அரசு மேற்கொண்டுள்ள திட்டங்களைப் பட்டியலிட்டு, பலதரப்பட்ட ஏழைகள், தாழ்த்தப்பட்டோர், அபலைகள் முதலியோர் நலன் பேணும் முயற்சிகளை எடுத்துக்காட்டி, புதிய பல திட்டங்களையும் அறிவித்து, அவையோரின் ஆரவார வரவேற்பைப் பெறும் வகையினதாக நிதிநிலை அறிக்கை அவரால் படிக்கப்படும். அவரது இலக்கியப் புலமை கொழிக்கும் சிந்தனையில் மலர்ந்த வளமான நடையுடைய அவ்வறிக்கைகள் ஓர் இலக்கிய விருந்தாகவே படைக்கப்படும். எதிர்க்கட்சியினர் பேசும்போது ஆளுங்கட்சியின் குறைகளை எடுத்துக்காட்டிக் கண்டிப்பது ஜனநாயகக் கடைமையே. ஆனால் சிலர் ஆளுங்கட்சியினருக்கு எரிச்சல் ஊட்டும் முறையில், அமைச்சர்களின் தகுதியை இழித்தும், மதிப்பைக் குறைத்தும் பேசுவதுண்டு. சிலர் பேசும் முறையே அப்படி அமைவதும், சிலர் திட்டமிட்டு அப்படிப் பேசுவதும் உண்டு. எவர்

எதற்காக அப்படிப் பேசினும் ஆளுங்கட்சியினர் அவையின் கண்ணியத்தைக் காத்திட பொறுமை காக்க வேண்டும்; சொல்லுக்குச் சொல் வீச முற்படலாகாது என்பது தமது கட்சியினருக்குக் கலைஞர் இட்டுள்ள கட்டளையாகும். அனைவருக்கும் சொன்ன 'பொறுமையை' அவர் இழந்திடாமல், படபடப்புக்கு இடந்தராமல், தேவைப்படும்போது அவரே விவாதத்தில் குறிக் கிட்டு, கடுஞ்சொல் தவிர்த்து விளக்கமளிப்பார். இளமையில் அவரது பேச்சிலும் எழுத்திலும் காணப்பட்ட வேகமும் துடிதுடிப்பும் இன்று பொறுப்புணர்வால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாகப் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் மறைந்தபோது கலைஞர் தாங்கொணாத் துயரில் மூழ்கி உள்ளம் உருகிட இறுதி அஞ்சலி செலுத்தியபோது தனது சிந்தை, சொல், செயல் யாவும் அண்ணாவின் இதயத்தில் சுரந்த அன்பு வெள்ளத்தில் தோய்ந்ததாக அமைய வேண்டும் என்னும் வேட்கையினால், 'அண்ணா உன் இதயத்தை எனக்கு இரவலாகத் தந்துவிட்டுச் செல்' என்று கேட்டுள்ளாரே - அது இப்படிப்பட்ட கனிவான இதயத்தைப் பெறுவதற்குத்தான் என்று கருதலாகும்.

கலைஞர் முதல்வராக இருந்தபோது ஒரு முறை, எதிர்க்கட்சியில் இடம் பெற்றிருந்த டாக்டர் ஹண்டே அவர்கள் தி.மு.க ஆட்சி திறமையுடன் செயற்படவில்லை என்று சாடுவதற்கு முற்பட்டு இந்த ஆட்சி மூன்றாந்தர ஆட்சியாகத்தான் உள்ளது என்றார். உடனே முதல்வர் கலைஞர் இவ்வாறு பதில் அளித்தார்.

''டாக்டர் ஹண்டே கூறியதை நான் மறுக்க விரும்பவில்லை. இந்த ஆட்சி நான்காந்தர ஆட்சி தான். நாட்டிலுள்ள நான்காந்தர மக்களுக்காகவே நடைபெறுகின்ற ஆட்சிதான் இது'' என்றார்.

அடித்தட்டு மக்களான நான்காம் வருணத் தாருக்குப் பாடுபடும் ஆட்சியை என்றைக்கும் மேல்வகுப்பார் தரமான ஆட்சி என்று ஏற்க விரும்பாது கண்டிப்பது அவர்தம் இயல்பு என்னும் கருத்து புலப்படப் பதில் அளித்ததை இது காட்டும்.

மாண்புமிகு எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த காலத்தில், திருச்செந்தூர் ஆலய வளாகத்துக்குள் கோயில் அறங்காவல் துறை அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை மர்மமான முறையில் மரணமுற்ற செய்தி வந்தபோது, அது ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் கோயில் உண்டியலை உடைத்து எண்ணுவதில் முறையுடன் நடந்து கொள்ளவில்லை என்பதால் அவர்கள் எண்ணிய தொகையை ஏற்றுக் கையெழுத்திட மறுத்த அந்த அதிகாரியுடன் ஏற்பட்ட தகராறில், அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தியதாக அனைத்துக் கட்சிகளும் குரல் கொடுத்து, நீதி விசாரணை கேட்டன. அதற்காக நியமிக்கப்பட்ட நீதிபதி பால் கமிஷன் விசாரணை நடத்தி அறிக்கை தந்தும் அதனை அரசு வெளியிடாமலே காலம் கடத்தியது.

அந்த அறிக்கையின் படி (நகல்) எதிர்க்கட்சித் தலைவரான கலைஞருக்குக் கிடைத்தது. அவர் அதனை வெளியிட்டு மக்கள் உண்மை அறியச் செய்தார். அதற்காக அப்போதைய அரசு கலைஞர்மீதும், அவருக்குத் துணை செய்தவர் என்று ஐயுற்றவர் மீதும் வழக்குப் போட்டு கைது செய்யவும் முற்பட்டது. ஆயினும் பால் கமிஷன் தந்த அறிக்கையை அரசு ஏற்று நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை. அரசின் இந்தப் போக்கைக் கண்டித்து உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்த, கலைஞர் மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை 200 கி.மீ. தொலைவு பல்லாயிரக் கணக்கான மக்கள் சூழ்ந்து வர எட்டு நாள் நெடிய நடை பயணம் மேற்கொண்டார். அது குறித்து ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் கலைஞரைக் கண்டிக்கும் ஆர்வத்தில், ''கருணாநிதி திருச்செந்தூர் முருகனின் வேலைக் காணவில்லை என்று நடைப் பயணமாகத் திருச்செந்தூர் கோவிலுக்குச் சென்றார். அவரைப் பார்க்க விரும்பாத முருகன் எங்கள் தலைவர் எம்.ஜி.ஆரின் ராமாவரம் தோட்டத்திற்கே வந்து விட்டார். அதனால் கருணாநிதி போனபோது திருச்செந்தூர் கோயிலில் முருகன் இல்லை'' என்று குறிப்பிட்டார். அப்போது கலைஞர் ''பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் நான் திருச்செந்தூர் கோயிலில் இருந்த வேல் மட்டுமே காணாமல் போயிற்று என எண்ணியிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் பேசுவதைப் பார்க்கும் போது முருகன் சிலையும் காணாமற் போயுள்ளது என்று தெரிகிறது'' என்று கூறிவிட்டு அமர்ந்தார். இதனால் அவையில் பெருஞ்சிரிப்பொலி எழுந்தது. முதல்வராக இருந்த எம்.ஜி..ஆரும், இதனால் எழுந்த நகைச்சுவை உணர்வினில் இருந்து, தம்மை விடுவித்துக்கொள்ள முடியவில்லை. ஆம். இது போன்ற நகைச்சுவை தோன்றவும், தம் கருத்தை நிலைநாட்டவும் ஏற்ற வகையில் விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசுவதில் வல்லவர் கலைஞர்.

கலைஞர், கேள்விகட்கு விடை அளிப்பதில் நகைச்சுவை தோன்றும் :

***திரு. சுப்பராயன் (இந்தியக் கம்யூனிஸ்டு):*** *திருப்பூரை அடுத்துள்ள அனுப்பர்பாளையத்தில் ஒரு காவல்நிலையம் அமைக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?*

**கலைஞர் மு.க :** 'கரு' உருவாகி இருக்கிறது. பத்து மாதத்தில் முடிவடையும். *(அவையிலே சிரிப்பொலி எழுகிறது)*

**திரு. சுப்பராயன் (இந்தியக் கம்யூனிஸ்டு) :** என் தொகுதியைச் சேர்ந்ததும், அரசு தலைமைக் கொறடா முபாரக்கின் சொந்த ஊருக்கு அருகே ஒரு காவல் நிலையம் அமைக்கப்படுமா?

**கலைஞர் மு.க. :** முபாரக் சொந்த ஊரில் குடியிருக்கவில்லை. வேறு ஊரில் வசிக்கிறார். எனவே அங்கு காவல் நிலையம் தேவையில்லை.

*(இதில் உள்ள 'கிண்டலை' அவை உணர்ந்து சிரித்தது)*

ஒருமுறை மன்றத்தில் 'ஆபாசம்' எது என்பது குறித்து விவாதம் எழுந்தது.

**திரு. குமாரதாஸ் (த.மா.கா உறுப்பினர்) :** உறுப்பினர்களும் சரி; அமைச்சர்களும் சரி; ஆபாசம் ஆபாசம் என்று சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். ஆபாசம் என்னவென்று அமைச்சர் விளக்குவாரா?

**அமைச்சர் முல்லைவேந்தன்:** அது அவரவர் களின் மனநிலையைப் பொறுத்தது.

**திரு. அப்துல் லத்தீப் (இ.தே.லீக்) :** ஆபாசம் என்பது பொதுவான சொல். அதற்கு எந்தவித வரையறையும் இல்லை. எந்த அடிப்படையில் எதை ஆபாசம் என்று இந்த அரசு முடிவெடுத்துச் செயற்படுகிறது?

**கலைஞர் மு.க. :** எல்லையில்லாமல் போவது தான் ஆபாசம்.

*(கலைஞரின் இந்த விளக்கம் கேட்டு அவையில் பலத்த சிரிப்பு எழுந்தது)*

குறிப்பாக, சட்டப் பேரவையில் கலைஞர் அமர்ந்துள்ள நேரத்தில் எல்லாம், அவையோர் அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் வகையில், அவையில் அவ்வப்போது கலகலப்பு ஏற்படவும், விவாதம் சூடும், சுவையும் உடையதாகவும் ஏற்றவாறு எண்ணங்களைப் பரிமாறும் திறமையில் அவரை மிஞ்சுபவர் எவரும் இல்லை எனலாம்.

''சொலல்வல்லன் சோர்விலன் [redacted]ஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது''

என்னும் திருக்குறள் தரும் பொருளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குபவர் கலைஞர். கலைஞரின் சட்டப் பேரவை விவாதங்களைப் படிப்போரே அவரது பங்களிப்பை முழுமையாக அறியலாகும் என்பதாலும், அதனை மேலும் விரிக்கில் பெருகும் என்பதாலும் கலைஞரின் சட்டப் பேரவைப் பணியை இந்த அளவில் எடுத்துக்காட்டி மகிழ்கிறேன்.



# மக்கள் நாடும் அரசு மருத்துவர் எப்படி இருக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி
மக்கள் நல்வாழ்வு மற்றும்
மின்சாரத் துறை அமைச்சர்

மாநிலத்தில் முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தின் பவள விழாவும், சட்டமன்றப் பேரவையின் வைர விழாவும், 14.7.97 அன்று நமது சென்னை மாநகரில் கொண்டாடப் பட இருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாககும். பாரம் பரியமிக்க நமது சட்டமன்றப் பேரவையானது, ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே பிற்படுத்தப்பட்ட மக்களின் குரலை எதிரொலித்த பெருமையைக் கொண்டது. சுதந்திர இந்தியாவில் மக்களாட்சி மலர்ந்த பின், தமிழக மக்களின் குரலை எதிரொலிக்கும் பேரவையாகத் திகழ்வதுடன், அவர்களின் நல்வாழ்வுக்கு பல்வேறு சட்டங்களை இயற்றி வருவதனால் இப்பேரவை மக்கள் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளது எனில் மிகையாகாது. ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் சட்டமன்றத்தில் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களும், பின்னர் அமையப் பெற்ற சட்டமன்றத்தில் மூதறிஞர் இராஜாஜி, கர்மவீரர் காமராஜ், பேரறிஞர் அண்ணா முதலான சான்றோர்களும் முதலமைச்சர்களாக, பல்வேறு காலகட்டங்களில் செயல்பட்ட பெருமை கொண்ட இப்பேரவையில், தன் மொழியாலும், எழுத்தாலும் உழைப்பாலும், தமிழக மக்களுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள நம் தலைவர் கலைஞர் அவர்கள், நான்காவது முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்று, பெரும் சாதனைகள் படைத்து வருவதை நாம் கண்டு பெருமிதமடைந்து வருகிறோம்.

சுதந்திர இந்தியாவின் வெள்ளி விழா கொண்டாடப் பட்டபோது, தமிழக முதல்வராக இருந்து செயல் பட்ட டாக்டர் கலைஞர் அவர்கள், தற்போது இந்த ஆண்டு சுதந்திர இந்தியாவின் பொன் விழாவையும் முன்னின்று நடத்த இருக்கிறார்கள். மதுரை மாநகராட்சி யின் வெள்ளி விழாக் கண்ட கலைஞர், தற்போது மாநிலத்தில் முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தின் பவள விழாவையும், சட்டமன்றப் பேரவையின் வைர விழா வையும் முன்னின்று நடத்துவது மிகவும் மகிழ்ச்சி தருவதாகும்.

பாரம்பரியமிக்க இப்பேரவையின் *1967–71, 1971–76* முதலான காலகட்டங்களில், நான் சட்டமன்ற உறுப்பினராக இடம் பெற்றவன். இக்காலகட்டத்தில், சட்டமன்றத்தில் அனைத்து நாட்களிலும் வருகைபுரிந்து, எப்படியாவது ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு பிரச்சினை யில் பங்கு கொண்டு உரையாற்றுகின்ற வாய்ப்பை பெற்றவன். பின்னர், *1989–90*ல் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிலகாலம் அமைச்சராகவும் இருந்து, என் தொகுதி மக்களுக்கும், மாநில மக்களுக்கும் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்ததை எனக்குக் கிடைத்த பெரும்பேறாகக் கருது கிறேன். கடந்த *1996* ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அண்ணா நகர் தொகுதியில்

நின்று வெற்றி பெற்று, தற்போது மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சராகச் செயல்பட்டு வருகிறேன். மேலும் 1978 முதல் 1984 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் செயல்பட்டு உள்ளேன். இடைக்காலத்தில் கலைக்கப் பட்ட இம்மேலவை, மீண்டும் நம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியால் மீண்டும் உருவாக்கப்பட இருப்பது, நாம் தற்போது நடத்தும் சட்டமன்றப் பேரவை வழாவிற்கு மேலும் பெருமை சேர்ப்பதாகும்.

1996 ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள், டாக்டர் கலைஞர் தலைமையில், இந்த அரசு பதவி யேற்றதற்குப் பின், இருந்து, ஊழல்களை ஒழித்து, நிர்வாகச் சீர்கேடுகளை அகற்றி மக்களுக்கு நல்லாட்சி வழங்க முனைந்து இருப்பதை நாடறியும். மக்களுக்காக, அரசால் தீட்டப்படும் திட்டங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும்; அதுவும் விரைந்து சென்று அடைய வேண்டும் என்பதே நமது அரசின் இலட்சியமாகும். இந்த இலட்சியத்தை அடைவதற்கு, அமைச்சர்களின் முயற்சி மட்டுமன்றி, உயர் அதிகாரிகள் மற்றும் அனைத்து அரசு அலுவலர்களின் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும்.

மக்கள் நாடும் அரசு மருத்துவர்கள் எப்படி இருக்க வேண்டும்?

நமது மருத்துவர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் சிறப்பாகச் செயலாற்றுவதையும், மேலை நாடுகளில் பணிபுரியும் சில மருத்துவர்கள், புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு புதிய மருந்துகள் கண்டுபிடித்து சாதனைகள் புரிவதையும் நாம் அறிவோம். ஆகவே, நம்முடைய மருத்துவர்கள் மற்ற நாடுகளின் மருத்துவர்களைப் போன்றே திறமை மிக்கவர்கள் என்பது தெளிவாகிறது அல்லவா?

ஆனால், அனைத்து அரசு மருத்துவர்களும் தங்கள் முழுத் திறமையையும் காட்டி, பணியில் ஈடுபடுகிறார்களா என்ற கேள்வி எழும்போது, ''ஆம், ஈடுபடுகிறார்கள்'' என்று மகிழ்ச்சியுடன் சொல்லும் நிலையில் நாம் இல்லை. அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் குறித்த காலத்தில் தங்கள் பணிக்கு வந்து, மருத்துவமனைக்கு வரும் ஏழை நோயாளிகளுக்கு முழு கவனத்துடன் மருத்துவம் பார்க்க வேண்டும் என்பதே என் அவா. சில மருத்துவர்கள், தங்கள் வேலை நேரத்தில், தனியார் மருத்துவ மனைகளுக்குச் சென்று பணிபுரிவதோ, தனியார் மருத்துவமனைகளின் விளம்பரப் பலகைகளில், தங்கள் பணி நேரத்தில் அங்கு பணிபுரிவதாக குறித்துவைப்பதோ நல்லது அல்ல.

கிராமங்களில் ஏழை மக்களுக்காக நடத்தப் படும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், மருத்துவர்கள் பணிக்குச் சரியாக வருவதில்லை என்றும் குறைபாடு மக்களிடையே உள்ளது. எனினும், இந்த அரசு பதவியேற்றபின், எடுத்துவரும் சில நடவடிக்கைகளால், சுமார் எழுபது விழுக்காடு மருத்துவர்கள் சரியான நேரத்திற்கு வந்து தங்கள் பணியைச் செவ்வனே செய்கிறார்கள் என்பது நமக்கு ஓரளவுக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும், அனைத்து மருத்துவர் களும் தங்கள் பணியைச் சரியாக செய்ய முன்வருவார்களேயானால் மக்கள் நல்வாழ்வில் நாம் பெரும் முன்னேற்றம் காண்போம்.

மக்களின் நல்வாழ்வின் மீது அக்கறை கொண்டுள்ள டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு, ரூ.900 கோடி மக்கள் நல்வாழ்வுத் துறைக்காக ஒதுக்கியுள்ளது. சொந்தக் கட்டிடம் இல்லாத 600 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, கட்டிடங்கள் கட்டித்தரும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு, நவீன உபகரணங்கள் வழங்க, ரூ.20 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டில்கள், மெத்தைகள் முதலானவை வழங்கப்பட்டு வருகின்றன. இது மட்டுமின்றி, தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் அனைத்து மருந்துகளும், இலவசமாகவும், தேவையான அளவிற்கும் வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே, நமது மாநிலத்தில்தான் மருந்துகள் மொத்தமாக வாங்கப்பட்டு, அனைத்து மாவட்ட, தாலுக்கா ஆரம்ப சுகாதார நிலையங் களுக்கும் முறைப்படி வழங்கப்பட்டு வருகிறது. மற்ற மாநிலத்து முதல்வர்களும் டெல்லியில் நடந்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் இத்திட்டத்தைப் பாராட்டியுள்ளனர்.

நமது மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் சுமார் 270 வகையான மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசால் வழங்கப்படும் மருந்துகளின் பெயர்களை அறிந்து, தேவையான நோயாளி களுக்குத் தேவையான அளவு நமது மருத்துவர் களால் வழங்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். சில மருத்துவர்கள் நமது அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள மருந்துகள் பற்றி கூட தெரிந்து கொள்ளாமல் இருப்பதை நான் ஆய்வின்போது பார்த்துள்ளேன்.

மேலும் நமது அரசு மருத்துவர்கள், நோயாளிகளிடம் கனிவுடனும், பரிவுடனும்

பழகுவதோடு, அவர்களுடன் வருகின்றவர்களின் துயர் துடைக்கும் வகையில் ஆறுதல் வார்த்தைகள் கூறவேண்டும்.

**வள்ளுவர் காட்டும் வழி :** மருத்துவர்கள் நோயாளிகளுக்கு வைத்தியம் செய்ய வேண்டிய முறையைப் பற்றி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் தெளிவாகக் கூறியுள்ளார். திருக்குறளில், மருந்துகள் எனும் அதிகாரத்தில் முதல் ஏழு பாக்களில் பொதுமக்கள் நோயின்றி வாழவது எப்படி என்று விளக்கிவிட்டு, எட்டாவது குறளில் மருத்துவர்களுக்கு, மருத்துவம் எப்படி செய்வது என்று விளக்குகிறார்.

''நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.''

நமது மருத்துவர்கள் வள்ளுவர் கூறும் வழியினை உணர்ந்து, அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்குத் தங்கள் சேவையை முழுமனதுடன் செய்ய வேண்டும்.

மருத்துவர்களின் ஒத்துழைப்புடன்தான், இந்நாட்டில் மக்களிடையே நோய்நொடிகள் ஒழிந்து, கி.பி. *2000* ஆம் ஆண்டுக்குள் ''அனைவர்க்கும் நல்வாழ்வு'' என்னும் இலட்சியத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் முதல்வர் கலைஞர் அரசின் எண்ணம் வெற்றி பெறும்.



**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** ஆயிரம் பேர்களைக் கொன்றவன் அரை வைத்தியன் என்று சாதாரணமாக சொல்லுவார்கள். அப்படியானால் இரண்டாயிரம் பேர்களைக் கொன்றவர்தான் முழு வைத்தியனாக ஆக முடியுமோ என்னவோ தெரியவில்லை.

**திரு. சா. கணேசன்:** ஒரு சிறு திருத்தம், ஆயிரம் பேரை அல்ல, ஆயிரம் வேரைக் கொண்டவன் அரை வைத்தியன் என்று தான் சொல்ல வேண்டும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** இப்படி ஹோமியோபதி சிகிச்சை செய்கின்றவர்கள் பத்து வருடங்கள் பிராக்டீஸ் செய்தால்தான் ரிஜிஸ்டர் செய்ய முடியும் என்றிருக்கிறது.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** ஆயிரம் பேரைக் கொல்லுவதற்குப் பத்து வருடங்கள் ஆகுமே.

10.8.1965

# ஜனநாயகத் தத்துவத்தின் தோற்றமும், பரிணாம வளர்ச்சியும்!

மாண்புமிகு **திரு. நாஞ்சில் கி. மனோகரன்**
வருவாய்த் துறை அமைச்சர்

ஆரம்பத்தில் நிலவி இருந்த தத்துவம் மன்னர் ஆட்சி முறை. ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டவர்கள் மக்களின் முழு அதிகாரங்களையும் கைப்பற்றி, ''தான்தான் எல்லாம்'' என்ற தான்தோன்றித்தனமான எண்ணங்களுக்கு உரமூட்டினர். தனி மனிதன் மாறுபட்ட முறையிலோ, வேறுபட்ட வகையிலோ, தனக்குக் கிடைத்த அதிகார ஏணியின் படிக்கட்டுகளில் ஏறி எழுப்பிய குரல் ''நான்தான் நாடு'' (I am the Mighty State). அந்தத் தனி மனிதர்களை எதிர்த்துத் தங்களது உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளுகின்ற முயற்சிகளில் ஈடுபட்ட மக்கள் சிறைச்சாலைகளுக்குள் தள்ளப்பட்டனர்.

பிரெஞ்சு நாட்டுப் புரட்சி, மக்களின் இயற்கையான உணர்வுகளுக்கு வடிவம் சமைத்தது. அதன் விளைவாக பிரெஞ்சு நாட்டிலேயே இருந்த ஏழைபாழைகள், ஏதும் தெரியாதவர்கள், உயர்ந்த இடத்திலே இருப்பவர் எதைச் சொன்னாலும் அதை வேதவாக்காகக் கருதி அடங்கிக் கிடந்தவர்கள் அதிகார துஷ்பிரயோகத்தை எதிர்த்து, ஏற்பட்ட அதிகாரக் குவியல்களைத் தூளாக்க முயன்றனர். அதன் விளைவு, பயங்கரமான சிறைக்கூடம் என்று அன்றைக்குக் கருதப்பட்ட ''பாஸ்டில்'' (Bastille) என்னும் சிறைச்சாலையை உடைத்தனர். விடுதலை பெற்ற வெற்றிக்குக் காரணமானவர்கள், கொடுமைக்குக் காரணமானவர்கள் யார், யார் என அவர்களை இனம் கண்டு வேரோடும், வேரடி மண்ணோடும் சாய்த்தனர். அப்படி வீழ்த்தப்பட்ட அராஜகத்திற்குச் சொந்தக்காரன் ''லூயி'' மன்னன், அவனது துணைவியார்.

அதைப்போல், இங்கிலாந்து நாட்டின் கொடுங்கோலன் அன்றைக்கு ஆண்டு கொண்டிருந்த ''சார்லஸ்''. ஆவேசம் கொண்டுவிட்ட மக்கள் அந்தக் கொடுமைக் காரனைச் சிரச்சேதம் செய்துவிட்டு தங்களது மகிழ்ச்சி ஆரவாரத்தை உலகெங்கும் பறைசாற்றினர்.

அதைப்போல், அன்றைய ரஷ்யாவின் கொடுங்கோலன் ''ஜார்'' மன்னன். அவனது ஆட்சியைப்பற்றி வர்ணித்த புரட்சிப் புலவன் ''பாரதி'' கீழ்க்கண்டவாறு எழுதிக்காட்டினார். ''எதேச்சாதிகாரத்தில் இருவகை நிலைகள் உண்டு'' அதிலே முதல் வரிசையில் உள்ளவர் ''தனக்கே எல்லாம்'' என்று கொக்கரித்து, வரிக்கு மேல் வரி விதித்து, மக்களை மாக்களாகக் கருதிக்கொண்டு தனது குடும்பத்தோடு எல்லாம் முடிந்து போயிற்று என்று கருதுபவர். எதேச்சாதிகாரிகளில் இரண்டாவது வகை, அதிகாரங்களை முழுமையாகக் கையகப்படுத்தி அத்தகைய அதிகாரங்கள் வாயிலாக மக்களுக்கு நன்மை விளைவிப்பதற்காக திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றுபவர்.

எகிப்து நாட்டுத் தலைவன் ''நாசர்''. அவனது நிரந்தரமான ''அஸ்வான்'' அணைக்கட்டு, கண்ணைக் கவரத்தக்க வகையில், பயனாளிகள் பாராட்டுகின்ற வகையில் அமைந்திருக்கிறது.

ஒட்டுமொத்த அதிகாரங்களை எடுத்துக் கொண்டவர்கள் இருவகை என்று குறிப்பிட்டேன். அதிலே முதல் வகைக்குச் சொந்தக்காரன் ''ஜார் மன்னன்''. இரண்டாவது வகைக்குச் சொந்தக்காரன் நாசர். ஜார் மன்னனைப் பற்றி கவித்தென்றல் பாரதியார் எழுதிய கருத்து வரிகள் எப்போதும் நிலைத்து நிற்கக் கூடியவை. இதோ ஜார் மன்னனின் ஆட்சியைப்பற்றியது:

''இம் என்றால் சிறைவாசம்; ஏன் என்றால்
வனவாசம் இவ்வா றங்கே
செம்மையலாம் பாழாகிக் கொடுமையே
யறமாகித் தீர்ந்த போதில்
அம்மைமனங் கனிந்திட்டாள்; அடிபரவி
யுண்மை சொலும் அடியார் தம்மை
மும்மையிலுங் காத்திடுநல் விழியாலே
நோக்கினாள் முடிந்தான் காலன்
இமயமலை வீழ்ந்தது போல் வீழ்ந்துவிட்டான்
ஜாரரசன், இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
யறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசடவென்று சரிந்திட்டார்
புயற்காற்றுச் சூறைதன்னில்
திமுதிமென மரம்வீழ்ந்து காடெல்லாம்
விறகான செய்தி போலே.''

ஜனநாயகம் என்ற வார்த்தை கிரேக்க மொழியில் இருந்து வந்தது. (Demokretia) இது இரண்டு உணர்வுகளை உள்ளடக்கியது. ஒன்று Demos. கிரேக்க மொழியில் அதன்பொருள் ''மக்கள்''. மற்றொன்று Kretos. அதனுடைய பொருள் ''ஆட்சி''. ஜனநாயகம் என்பது குறிப்பிட்டவர்களால் மட்டும் ஆளப்படும் ஆட்சி அல்ல. மாறாக, மனித சமுதாயத்தின் அடிப்படை உரிமைகள். மனிதர்கள் எப்போதும் தங்களையே ஆட்கொள்ள வேண்டும் என்ற இரண்டு வகையானது ஜனநாயகத்தில் உண்டு. ஒன்று Direct Democracy. அதாவது, மக்களே எழுகின்ற கேள்விகளுக்கு வாக்களிப்பதன் மூலம் தங்களை நிலை நாட்டிக்கொள்வது. இரண்டாவது, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் உருவாக்கப்படும் ஆட்சி. அந்த ஆட்சிமுறை என்பது மக்கள் தங்களுக்குத் தேவையானவர்களைத் தேர்ந்தெடுப்பது. ஜனநாயகத்தைப் பற்றி விளக்கம் தந்த அரசியல் மேதை, 'ஜனநாயகம்' ஆட்சி முறையின் ஒரு தத்துவமே தவிர ஆட்சி அமைப்பல்ல என்றார். ஜனநாயக ஆட்சி முறையில், அமைப்பு முறையில் மிக முக்கியமான தேவை விழிப்புணர்ச்சியுள்ள எதிர்க்கட்சி. அரசியல் வித்தகர் ஒருவர் தெரிவித்தார்: The effective functioning of opposition is lubricating oil in the wheels of democratic machine."

தமிழக சட்டமன்றப் பவள விழா, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா இவை இரண்டையும் இணைத்து ஜனநாயகப் பெருவிழாவாக தமிழ்நாடு கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. பாரம்பரியமிக்க இந்த இரண்டு விழாக்களும் தமிழகத்தின் சிறப்பினைச் சொல்லிக் கொண்டிருக்கும். இடையே வந்த சில முரண்பாடுகளைத் தவிர, வேறுபாடுகளைத் தவிர, இந்த விழாக்களைக் கொண்டாடுவதில் தமிழ்நாடு மகிழ்ச்சியடைகிறது. இந்த இரண்டு விழாக்களையும் மனநிறைவோடு கொண்டாட வேண்டும் என்ற உத்வேகமும், உணர்ச்சி ஓட்டமும், உவகைப் பெருக்கும் நிறைந்து காணப்படுகிறது. இதனைப் பார்த்துப் பூரிக்காதவர்களே இல்லை.

தமிழகத்தின் ஜனநாயக உணர்வுக்கு அடித்தளம் அமைத்தவர் என்னை ஆளாக்கிய அண்ணன் பேரறிஞர் அண்ணா. தொடர்ந்து அண்ணா வழியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி ஆளும்கட்சியாக இருந்தநேரத்திலும், எதிர்க்கட்சியாக இயங்கிய வேளையிலும், கலைஞர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி இந்தியத் துணைக் கண்டமே வியக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது. இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் டாக்டர் கலைஞர் அவர்களின் தேர்ந்த பண்பட்ட ஆட்சி முறையால் நாட்டு மக்களின் கவனத்தில் தன்னை வீற்றிருக்கச் செய்தவர் டாக்டர் கலைஞர். ஜனநாயகத்தின் சிறப்புப் பற்றி, அதன் புனிதமான நோக்கம் பற்றி, கலைஞரின் உள்ளம் தெரிவித்த கருத்துக்கள் நிரந்தரமாக நிலை பெற்றவை.

மக்கள் எந்த நேரத்திலும் கலைஞரை அணுகலாம். ஆசையோடு புன்முறுவல் பூத்து, காரியங்களைச் செய்து தருவதில் கலைஞருக்கு நிகர் கலைஞரேதான். டெல்லி வட்டாரத்தில் அவரைப் பற்றிப் பாராட்டிப் பேசாத தலைவர்களே இல்லை. கலைஞரைப் போன்ற ஒருவரை நாம் முதலமைச்சராகப் பெற முடியவில்லையே என்று வேதனைக் கண்ணீர் வடிப்பவர்கள் ஏராளம். தென்னகத்திலும் சரி, வட புலத்திலும் சரி, ஜனநாயகத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ்பவர். மக்களின் கண்ணின் மணியாக, ஒலியாக, ஒளியாக, பிரகாசித்துக் கொண்டிருக்கும் அவர் நமக்குக் கிடைத்த மாணிக்கம், தங்கம், வைரம், முத்துக்கள்.

கலைஞரின் கரம் வலுப்பெற்றால் தாயகத்திற்கு அது ஒரு பாதுகாப்பு அரணாக அமையும். இந்த நேரத்தில் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறேன்.

புதிய சமுதாயம் உருவாக்குதற்குப் புத்துணர்வோடு புறப்பட்ட அவரைப் பின்பற்றுவதற்கு கோடிக்கணக்கான மக்கள்.

சட்டப்பேரவையில் அவர் முதலமைச்சராக இருந்த நேரத்திலும், இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்திலும், எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றிய நேரத்திலும், அவர் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். புதிய தலைமுறை ஒன்று அவரால் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் அடைந்து கொண்டிருக்கிற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சட்டப் பேரவையில் அவர்தம் கருத்தைத் திணித்ததும் இல்லை; ஏற்புடைத்தான கருத்துக்களை ஏற்றுக் கொள்ளத் தயங்கியதும் இல்லை. இதுவே ஜனநாயகத் தத்துவத்தின் பரிணாம வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

நிதானமும், பாரபட்சமற்ற போக்கினையும் பெற்றிருக்கும் பேரவைத் தலைவர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களைப் பாராட்டாதவர்களே இல்லை. பவள விழா, வைர விழா இந்த இரண்டு விழாக்களையும் வெற்றிகரமாக நடத்த பேரவைத் தலைவர் எடுத்துக்கொண்ட முயற்சி வாழ்த்துவதற்குரிய ஒன்று; வாழ்த்துகிறேன்.



ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கோட்டை



# நான் அறிந்த பேரவைத் தலைவர்கள்

நான் பிறந்தது சென்னையில். ஆண்டு 1932. காலஞ்சென்ற என்னுடைய தகப்பனார் திரு. பி.டி. ராஜன் அவர்கள் சென்னை மாகாண ஆட்சியை நடத்திய நீதிக்கட்சி அமைச்சரவையில் ஓர் அமைச்சர். நான் பிறந்த வீடு சென்னை மைலாப்பூர், டி.டி.கே. சாலையில் இருந்தது. அந்த வீடு அன்றிருந்ததைப் போலவே இன்றும் இருக்கின்றது. பல ஆண்டுகளாக கோத்ரெஜ் கம்பெனியின் அலுவலகமாக இருப்பதைப் பார்க்கிறேன். 1947–ஆம் ஆண்டு துவக்கத்திலிருந்து கல்லூரிப் படிப்பிற்காகச் சென்னையிலே இருந்தேன்.

காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்களின் சகோதரர் திரு. வெங்கடேச ஐயங்கார் அவர்களுக்கு அந்த வீடு சொந்தம் என்று சொல்வார்கள். பெரும்பாலும் என்னுடைய பெரிய தகப்பனார், அன்றைய அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் இல்லத்திலேயே தங்கியிருப்பேன். தகப்பனார் அமைச்சராக இருந்தது வெள்ளையர் ஆட்சிக்காலம். கோட்டைக்குச் சென்றிருக்கிறேன்; ஆனால் காரை விட்டு இறங்கக் கூடாது என்று சொல்வார்கள். அதைப்போல நீதிக்கட்சியின் தலைமையிடமாக, அண்ணா சாலையில் இருக்கக் கூடிய 'காஸ்மோபாலிடன் கிளப்'க்கு அடிக்கடி போவதுண்டு. அங்கேயும் குழந்தைகள் உள்ளே நுழையக் கூடாது. அந்த இடத்தைப் பற்றி இன்றும் பசுமையாக நினைவிலே நிற்பது, அங்கே 'காபி' எல்லாம் உயரமான வெள்ளி டம்ளரிலே கொடுப்பார்கள். அவையெல்லாம் இப்போது என்னவாயிற்று என்பது தெரியவில்லை.

முதல் பேரவைத் தலைவர் திரு. புலுசு சாம்பமூர்த்தி அவர்களைப் பார்த்திருக்கிறேன். காந்தியடிகளைப் பின்பற்றி மேலாடை இல்லாமல், இடையிலே வேட்டியும், மேலே துண்டும்தான் அவர்கள் அணிவார்கள். ஆனால் விடுதலை கிடைப்பதற்கு முன்னாலேயே அவர் இறந்துவிட்டார். அதற்குப் பிறகு வந்த எல்லா பேரவைத் தலைவர்களையும் நான் நேராகவே அறிந்திருக்கிறேன்.

என்னுடைய பெரிய தகப்பனார் தற்போதுள்ள வள்ளுவர் கோட்டத்தை ஒட்டிய சாலையிலே குடியிருந்தார்கள். அந்தச் சாலையில் நேராகச் சென்றால் நுங்கம்பாக்கம் சாலை இணைகின்ற இடத்தில் ஒரு சந்திலே ஒரு சிறிய வீட்டில் முன்னாள் பேரவைத் தலைவர் திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் குடியிருந்தார்கள். ஆகவே, அவர்களை அடிக்கடி பார்த்திருக்கிறேன். 1946 முதல் 1955 வரை அவர் பேரவைத் தலைவராக இருந்தார். அவர் ஆங்கிலத்தில் நன்கு புலமை பெற்றிருந்தார்.

அவர்களுக்குப் பின்னால் சிறிதுகாலம் பேரவைத் தலைவராக இருந்த திரு. கோபால மேனன் அவர்களையும் எனக்கு ஓரளவு தெரியும். காரணம் அவர்களுடைய மகனும் நானும் சட்டக் கல்லூரியிலே அன்றைக்கு ஒன்றாகப் படித்தோம். அதற்குப் பின்னர் வந்த டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களை பொதுவாக சென்னையிலே தெரியாதவர்களே இருக்க முடியாது.

மாண்புமிகு திரு. பி.டி. ஆர். பழனிவேல் ராஜன்
பேரவைத் தலைவர்

அதற்குப் பிறகு வந்த பேரவைத் தலைவர் திரு. எஸ். செல்லப்பாண்டியன் அவர்களையும் மிகமிக நன்றாகவே எனக்குத் தெரியும். பல குற்றவியல் வழக்குகளிலே அவரோடு சேர்ந்து நான் நீதிமன்றத்திலே வாதாடியிருக்கிறேன். மூத்த வழக்குரைஞர் என்ற முறையில் தன்னுடைய உரிமையும், கட்சிக்காரர்களுடைய உரிமையும் சிறிதளவும் பாதிக்கக் கூடாது என்பதில் மிக உறுதியாக இருப்பார். நீதிமன்றங்களிலேயே அவருக்கு வெகுவாகக் கோபம் வரும். பேரவைத் தலைவராக அவர் செயல்பட்டதை நான் நேரிலே பார்த்ததில்லை. பேரவைத் தலைவர் என்ற முறையில் நடுநிலையாக பேரவையை நடத்தினார் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு மறைந்த திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் 5 மாத காலம்தான் பேரவைத் தலைவராக இருந்தார்கள். தென்காசி இடைத் தேர்தலிலே–பேரவைத் தலைவராக இருக்கும்போதே - தேர்தல் பணிகளிலே ஈடுபட்டார் என்ற காரணத்திற்காக அன்றைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் அவரைப் பதவியிலிருந்து விலகச் சொன்னார்கள்.

அண்ணா வழியிலே வந்த கலைஞர் அவர்களும், நான் பேரவைத் தலைவரான வுடன் கட்சித் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ள வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள். நான் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற நேரத்தில், கட்சியின் தலைமைக் கழகத்தில் சட்டப்பிரிவுச் செயலாளராக இருந்தேன். அந்தப் பதவியிலிருந்து விலகி விட்டேன். சில மாதங்கள் கழித்து மதுரை மாநகராட்சிக்கு நடந்த தேர்தலில் என்னுடைய தொகுதியில் மட்டுமாவது கட்சி நண்பர்களுக்குத் தேர்தல் வேலை பார்க்கலாமா என்று அனுமதி கேட்டேன்; கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அண்மையிலே என்னுடைய நீண்ட நாள் நண்பரும், மாண்புமிகு விவசாய அமைச்சரும், சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளருமான திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் சேலத்தில் மிகச் சிறப்பாகக் கட்சி மாநாட்டை நடத்தினார்கள். மாநாட்டிற்கு நான் வரலாமா என்று என்னுடைய தலைவர் கலைஞர் அவர்களைக் கேட்டேன். அதற்கு அவர், அவருக்கே உரிய பாணியில், 'நீங்கள் பார்வையாளராக வந்து பார்ப்பதை யாரும் தடுக்க முடியாது' என்று சொன்னார்கள். அவர் சொன்ன வார்த்தையின் கருத்தைப் புரிந்துகொண்டு நான் மாநாட்டிற்குச் செல்லாமல் இருந்துவிட்டேன்.

அண்மையிலேகூட, கட்சித் தேர்தலையொட்டி கட்சி உறுப்பினர்கள் தங்களுடைய உறுப்பினர் அட்டையை புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்பது கட்சியின் நடைமுறை சட்டம். நான் என்னுடைய உறுப்பினர் அட்டையை இதுவரை புதுப்பித்துக் கொள்ளவில்லை. கட்சித் தேர்தல் முடிந்த பிறகு புதுப்பித்துக் கொள்ளலாமென்று இருக்கிறேன்.

திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து விலகியபின், புலவர் கோவிந்தன் அவர்கள் இரண்டு ஆண்டுகாலம் பேரவைத் தலைவராக இருந்தார்கள். சுமுகமாகப் பேரவையை நடத்துவதில் வல்லவர்.

அடுத்த பேரவையில் திரு. கே.ஏ. மதியழகன் அவர்கள் பேரவைத் தலைவராக இருந்தார்கள். அவரது காலத்திலேதான், அவருக்கும் ஆளும் கட்சிக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்ட நேரத்தில் இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் பேரவைத் தலைவர் மீதும், மற்றொரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் அரசின் மீதும்.

அந்தக் காலத்திலே சட்டமன்றத்திலே நான் அதிகம் பேசாவிட்டாலும், அவர், அரசு மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முதலிலே எடுப்பதாகச் சொன்ன நேரத்தில், ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பி, பேரவைத் தலைவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முதலிலே எடுத்து விவாதம் நடத்திவிட்டு, பின்னர் அரசின் மீதான நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கூறினேன். அவர் பதவி விலக்கத்திற்குப் பின் மீண்டும் புலவர் கோவிந்தன் அவர்கள் பேரவைத் தலைவராக இருந்தார்கள்.

திரு. முனு ஆதி அவர்கள் பேரவைத் தலைவராக இருந்த காலத்தில் நான் சட்டமன்றத்திலே இருந்தது கிடையாது. ஆனால், 1967–லே பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நடந்த ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி ஒரு தவறான விமரிசனத்தைச் செய்த நேரத்தில் என் பக்கத்திலே உட்கார்ந்திருந்த நண்பர் திரு. முனு ஆதி அவர்கள், பேரவைத் தலைவரின் அனுமதியைக் கூடப் பெறாமல் எழுந்து நின்று ஆவேசமாக ஒருமையிலேயே திரு. கருத்திருமன் அவர்களைக் குற்றம் சாட்டினார்கள். முதலமைச்சராக இருந்த

அண்ணா அவர்கள் கோபமாக திரு. முனு ஆதி அவர்களை அருகில் அழைத்து விரைவிலே ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று மெதுவாகச் சொன்னார்கள். 'என்ன' என்று பயத்தோடு திரு. முனு ஆதி அவர்கள் கேட்டதற்கு, அண்ணா அவர்கள், 'ஒன்று நான் முதலமைச்சராக இருக்க வேண்டும்; அல்லது நீ சட்டமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும்; இரண்டு பேரும் ஒன்றாக இருக்க முடியாது' என்று கடுமையாகச் சொன்னார்கள். உடனே, திரு. முனு ஆதி அவர்கள் அண்ணாவிடம் மன்னிப்பு கேட்டார்கள்.

அதற்கடுத்து பேரவைத் தலைவராக இருந்த திரு. கே. இராஜாராம் அவர்கள் எனக்கு மிகமிக நெருக்கமான நண்பர். அது குடும்ப ரீதியாக ஏற்பட்ட நட்பு. இராஜாராம் அவர்கள் திருமணத்தை என் தகப்பனார் தலைமையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் நடத்தி வைத்தார்கள். இராஜாராம் அவர்களின் தகப்பனார் திரு. கஸ்தூரி பிள்ளை நீதிக் கட்சியிலே ஒரு மூத்த தலைவர்.

கலைஞர் முதலமைச்சரான பிறகு, இராஜாராம் அவர்கள் வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்தார்கள். நான் அப்போது தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் தலைவராக இருந்தேன். திரு. கஸ்தூரி பிள்ளை அவர்கள் அச்சங்கத்தின் துணைத் தலைவராக இருந்தார்கள். இராஜாராம் அவர்கள் பேரவைத் தலைவராக இருந்தபோது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர் மீது ஆளும் கட்சி அமைச்சர் ஒருவர் பேரவையிலேயே, மதுரை மாவட்டத்திலே கம்பம் பள்ளத்தாக்கிலே தேனி முத்துத்தேவன்பட்டி என்ற கிராமத்தில் ஒரு பெரிய சொத்தை கலைஞர் அவர்களின் குடும்பத்தினர் வாங்கிவிட்டார்கள் என்று ஒரு அபத்தமான குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். அது தொடர்பாக கலைஞர் அவர்களின் ஆணைப்படி அந்தச் சொத்துக்கு உண்டான எல்லா ஆவணங் களையும் குறுகிய காலத்திலேயே நகல் எடுத்து, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட சொத்து திரு. கம்பம் நடராசன் அவர்களுக்குச் சொந்த மானது என்றும், கலைஞர் அவர்களுக்கும் அந்தச் சொத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் விவரங்களைச் சேகரித்துக் கொடுத்தேன். பேரவைத் தலைவராக இருந்த இராஜாராம் அவர்கள், அமைச்சர் சொன்ன குற்றச்சாட்டு ஆதாரம் அற்றது, உண்மைக்குப் புறம்பானது என்று தீர்ப்பு வழங் கினார்கள்.

அதற்குப் பிறகு வந்த பேரவைத் தலைவர் திரு. பி.எச். பாண்டியன் அவர்களைச் சில முறை சந்தித்திருக்கிறேன். ஒரு வகையிலே சட்டமன்ற வரலாற்றிலேயே அவர் இடம் பெற்றுவிட்டார். தேர்ந்தெடுக்கப்பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் 10 பேர்களை, இன்றைய கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் உட்பட, அரசியல் சட்டத் திற்கு விரோதமான நடவடிக்கைகளிலே ஈடுபட்டார்கள் என்று கூறி, அவர்களின் சட்டமன்ற உறுப்பினர் பதவியைப் பறித்தார்.

அதற்குப் பிறகு, இன்று அமைச்சராக இருக்கும் என்னுடைய நெருங்கிய நண்பர் முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள் பேரவைத் தலைவராக இருந்தார்கள். சட்டமன்ற நிகழ்ச்சிகள் அனைத்தையுமே அவர் காலத்தில் வேற்றுமொழிக் கலப்பில்லாமல் தூய தமிழிலேயே நடத்திக் காட்டினார்கள்.

அதற்குப் பிறகு வந்த பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்களையும் எனக்கு நன்றாகத் தெரியும். மூன்று ஆண்டுகாலம் அவரும், நானும் மதுரை காமராஜர் பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்களாகப் பணியாற்றி னோம். பேரவையை அவர் நடத்தியதை நான் பார்த்ததில்லை. ஆனால், அப்போதைய பேரவை நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்தால், அவர் பேரவையை எந்த முறையிலே நடத்தினார் என்பது நன்றாகத் தெரிகின்றது.

நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலம் தவிர, திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்களும், டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களும் பேரவைத் தலைவர்களாக இருந்த காலத்திலும் சட்டமன்ற நிகழ்ச்சிகளை அடிக்கடி பார்த்திருக் கிறேன். எனக்குத் தெரிந்தமட்டில் சட்டமன்ற வரலாற்றில் சட்டமன்ற விதிகளையும், மரபு களையும் முழுமையாகத் தெரிந்து வைத்திருந்தவர் ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் ஒரு வழக்குரைஞர். விடுதலைக்குப் பின் நாட்டில் சட்டமன்ற நிகழ்ச்சிகள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே நடந்த காலத்திலே அவர் பேரவைத் தலைவராக இருந்தார். சட்டமன்ற மரபுகள், விதிகளுக்கான புத்தகமான 'May's Parliamentary Practice' என்ற புத்தகத்தை ஒரு வரிகூட விடாமல் நன்றாகப் படித்து அறிந்தவர். தோற்றத்திலே சிறுவரைப்போல காட்சியளிப்பார். காரணம் 5 அடி 3 அங்குலம் என்ற உயரத்தில்தான் அவர்கள் இருப்பார்கள். அரசாங்கம் கொடுத்த வாகனத்திலே அவர் உள்ளே இருக்கிறாரா, இல்லையா என்பதை வெளியிலே பறக்கின்ற கொடியை வைத்துத்தான் சொல்ல முடியும். அவர்கள் பேரவைத் தலைவராக இருந்த பல



11-வது சட்டப் பேரவையின் தலைவராக திரு. பி.டி.ஆர் பழனிவேல் ராஜன் அவர்கள் பதவியேற்பு - 23-5-96

ஆண்டுகாலம் தன்னுடைய சொந்த வீட்டிலேயே குடியிருந்தார்கள்.

காங்கிரஸ் கட்சியிலே தீவிரப் பற்று இருந்தாலும் பேரவைத் தலைவரான பிறகு எவ்வாறு நடு நிலையோடு இருக்க முடியும் என்பதற்கு நாட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அவர்கள் இருந்தார்கள். சட்டமன்ற நடவடிக்கைகளில் அவருக்கு அமைச்சரும் ஒன்றுதான்; உறுப்பினர் களும் ஒன்றுதான். தவறுகள் நடந்தால், அது யாராக இருந்தாலும் மிகக் கடுமையாக கண்டிப்பார்கள். அமைச்சர்கள் வினா–விடை நேரத்தில் அளிக்கின்ற பதில் தெளிவாக இல்லை யென்றால், 'மீண்டும் இந்த வினா கேட்கப்படும், ஒழுங்கான பதிலைத் தரவேண்டும்' என்று கடுமையாகச் சொல்வார்கள். கட்சியை ஒட்டிய எல்லா தொடர்பு களையும் துண்டித்துக் கொண்டார்கள். அடுத்த முறை தேர்தலிலே நின்ற நேரத்தில் சுயேச்சை யாகவே நின்றார். 9 ஆண்டு காலம் பேரவைத் தலைவராக இருந்த பெருமை அவருக்குத்தான் உண்டு. அதற்குப் பிறகு மத்திய அரசின் தேர்வாணைக் குழு உறுப்பினராகப் பதவி ஏற்றுக்கொண்டு பேரவைத் தலைவர் பதவியி லிருந்து விலகிவிட்டார். எனக்குத் தெரிந்தமட்டில் பாராளுமன்ற விதிமுறைகள், மரபுகள்பற்றி ஆழ்ந்த அறிவுபடைத்த மிகச் சிறப்பான பேரவைத் தலைவர் திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள்.

அதைப் போலவே, டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்கள் பேரவையை நடத்தியதையும் பார்த்திருக்கிறேன். அவர் காட்சிக்கு மிகவும் எளியவர். அவரது அணுகுமுறையும் மிகவும் இனிமையாகவே இருக்கும். விவாதத்திலே சூடு கிளம்புகின்ற நேரத்திலே, எதையாவது விளை யாட்டாகப் பேசி அந்தச் சூட்டைத் தணிக்கக் கூடிய வல்லமை படைத்தவர். ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்றில்லாமல் எல்லா உறுப்பினர்களிடத்திலும் அன்பைப் பெற்றவர்.

டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களுக்கு மருத்துவத் துறையிலே இருந்த பெயரைப் போலவே, சட்டமன்றத்திலும் அவருடைய இனிமையான அணுகுமுறையின் காரணமாக எல்லோருடைய அன்பையும் பெற்றிருந்தார். ஆகவே, ஒரு சிறந்த சபாநாயகருக்கு திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்களின் ஆற்றலும், டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களுடைய அணுகுமுறையும் இருக்க வேண்டும். அந்த இரண்டுமே எனக்கில்லை. வரும் காலத்திலே அத்தகைய சிறப்பு களைப் பெறுவதற்கு நான் முயற்சி செய்வேன்.

# வளர்ச்சிப் பணிகளின் அச்சாணி உள்ளாட்சி அமைப்புக்களே

கிராம சுய ஆட்சி என்பது ஓர் புனிதமான சொல். சமுதாயம் என்ற அமைப்பில் ஒரு கூட்டமாக வாழும் நாம், நமக்காக நல்ல வழிமுறைகளை வகுத்துக் கொண்டு நாமே நம்மை சுய நலமின்றி நெறிப்படுத்திச் செல்லுதல் தான் சுய ஆட்சி. நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் கனவு கண்ட கிராம சுயராஜியமும் இதுதான். காந்தியடிகள் இதனையே வலியுறுத்தி சுயஆட்சி என்பது அடிமட்டத்திலிருந்து தொடங்க வேண்டும். அதற்கு ஒவ்வொரு கிராமமும் எல்லா அதிகாரங்களையும் கொண்ட பஞ்சாயத்து குடியரசாக மலர வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

நம் நாட்டின் ஜனநாயக அமைப்பினைப் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் 'ஜனநாயகம் என்ற அமைப்பு தழைத்தோங்கிட நம் ஒவ்வொருவரிடமும் ஜனநாயக மனநிலை – மனஉரம் – மனப்பாங்கு வளரவேண்டும். எத்தகைய அறைகூவலையும் ஏற்கத் தக்க ஜனநாயக நல்லுணர்வையும் நாம் பெற வேண்டும்' என்று குறிப்பிடுகின்றார்.

இத்தகைய பஞ்சாயத்து தன் ஆட்சி அமைப்புகள், நம்மடைய இந்திய சமுதாயத்திற்கு குறிப்பாக தமிழ் மக்களுக்கு புதியவையல்ல. வரலாற்றுச் சான்றுகள் இன்றும் இத்தகைய சிறப்பான அமைப்புகளின் தன்மையை பறைசாற்றுகின்றன. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 30.11.1996 ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மாநாட்டில் உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டது போல் நம் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் என்ற இடத்தில் உள்ள வைகுண்ட பெருமாள் கோவில் மதில் சுவர்களில் உள்ள பல கல்வெட்டுகளின் மூலம் உள்ளாட்சி முறை கி.பி. 921 ஆம் ஆண்டில் முதலாம் பராந்தகச் சோழன் காலத்தில் உள்ளூர் மக்களின் நலன் கருதி அமல்படுத்தப்பட்டு திறமையாக நிர்வகிக்கப்பட்டதாக தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டில் இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஊக்கம் அளித்து, அவை சிறப்பாக அமைய வழிவகுத்துக் கொடுத்த பெருமை தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களான சேரர், சோழர், பாண்டியர் ஆகியோரையே சாரும்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி**
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

வரலாற்று ஆதாரங்களின்படி, இந்த ஊராட்சி அமைப்பில் 'பரவலாக்கப்பட்ட அணுகுமுறை' கையாளப்பட்டிருந்தது. கிராமங்கள் குக்கிராமங் களாக பிரிக்கப்பட்டிருந்தன. குக்கிராமங்கள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் உறுப்பினர்கள் 'குடவோலை முறை' மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர் தலுக்குப் போட்டியிடும் நபர்கள், தங்களின் அறிவு, ஆற்றல், தன்னார்வம், தன்னலமின்மை, ஒழுக்கக் கட்டுப்பாடான வாழ்க்கை முறை ஆகியவற்றின் அடிப்படையிலேதான் தேர்தலில் நிற்க அனுமதிக் கப்பட்டனர்.

இந்திய வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும்போது, பண்டைய காலத்தில் நம் நாட்டை சக்கரவர்த்திகள் ஆட்சி செய்தபோதும், ஏறத்தாழ 18ஆம் நூற்றாண்டு வரை, கிராம அளவிலான உள்ளாட்சி முறையே பழக்கத்தில் இருந்து வந்திருக் கிறது. பஞ்சாயத்துக்கள் பேரரசின் பிரதிநிதிகளாக மட்டும் அல்லாமல் தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழும் மக்களின் நலனுக்காக அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டன. இவ்வாறு நடை பெற்ற உள்ளாட்சி அமைப்புகளானது, ஆங்கிலேயர் கள் ஆட்சியின்போது சீர்குலைந்து போனது. சீர்குலைந்த உள்ளாட்சி அமைப்புகளை சட்டபூர்வ மாக்க விரும்பிய ஆங்கிலேய அரசு 1884 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்திலும், 1885 ஆம் ஆண்டு வங்க மாகாணத்திலும் ஊராட்சி சட்டங்களை இயற்றின. இத்தகைய சட்டங்கள் சரிவர இயங்காத சூழ்நிலை உருவானது. மேலும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஓர் ஊராட்சி என்ற அடிப்படையில் அதிகார அமைப்பு கள் ஏற்படுத்தப்படவில்லை. இதனைத் தொடர்ந்து 1920 ஆம் ஆண்டு கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் மற்றும் சென்னை லோக்கல் போர்டு சட்டம் ஆகியவை இயற்றப்பட்டன.

இத்தகையதொரு சிறப்பான தன்னாட்சி முறை அமைப்புதான் சுதந்திர இந்தியாவில் நிலை பெற்று இருக்க வேண்டும் என்று இந்தியாவை உருவாக்கிய தலைவர்கள் விரும்பினர். இதன் அடிப்படையில் தான் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் நாற்பதாவது விதி, மாநிலங்கள் தங்கள் கிராமப் பஞ்சாயத்துக்களை அமைக்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் தாங்களே எடுத்துக் கொள்ளும் அளவிற்கு, சுயாட்சி பகுதிகளாகச் செயல் படத் தேவையான சக்திகளையும் அதிகாரங்களையும் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு 1957 ஆம் ஆண்டில் பல்வந்தராய் மேத்தா என்ற சமூக விஞ்ஞானி, மூன்று அடுக்கு உள்ளாட்சி முறையினை (கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி) பரிந்துரை செய்தார். இதன் பிறகு 1958 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் மாவட்ட வளர்ச்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி ஆகிய மூன்று அமைப்புகள் உருவாக்கப்பட்டு சட்ட வடிவம் கொடுக்கப்பட்டது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, உள்ளாட்சி அமைப்புகள் 'மாநிலப் பட்டியலில்' இடம் பெற்றிருந்தது. இதனால் இந்திய நாடெங்கும் ஓர் ஒருமித்த ஊராட்சிமுறை ஏற்படுவதில் தடைகள் ஏற்பட்டன. மாநிலங்கள் தங்கள் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப, தங்கள் அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளோடு பகிர்ந்து கொண்டனர். சில மாநிலங்கள் இத்தகைய அதிகாரப் பகிர்விற்கு முன்வரவில்லை.

இந்தியா முழுமைக்கும் ஒரு பொதுவான மூன்றடுக்கு உள்ளாட்சி முறை அமையப் பெறவும், மக்களின் பிரதிநிதிகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு முறையாகத் தேர்வு செய்யப்படவும், வழிவகை செய்யப்பட்டது. இதற்காக இந்திய அரசமைப்புச் சட்டம் (73வது சட்டத் திருத்தம்) கிராம உள்ளாட்சி அமைப்புகளுக்கென்றும் (74வது சட்ட திருத்தம்) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கென்றும் 1992 ஆம் ஆண்டு திருத்தப்பட்டது. இவ்வாறு திருத்தப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டம் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் தேதி குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று அமலுக்கு வந்தது.

இதன் அடிப்படையில்தான் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, இயற்றப்பட்டு, 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் நாள் தமிழக ஆளுனரால் ஒப்புதல் பெறப்பட்டது. இதனால் முன்பு இருந்த 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் நீக்கப்பட்டு, புதிய சட்டம் உருவானது. இதன் மூலம் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஏற்படுத்தப்பட்டன.

இத்தகைய உள்ளாட்சி அமைப்புகள் பற்றி நமது தேசத்தந்தை மகாத்மா காந்தி கூறியது போல, இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்பதற்கு ஏற்றாற்போல், மக்கள் தொகையில் பெரும் பான்மையினர் கிராமங்களிலேயே வாழ்ந்து வரு கின்றனர். கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை மக்களின் அடிப்படை வசதிகள், வேலை வாய்ப்புகள், இதர வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

இவ்வாறு துன்பத்தில் உழன்று கொண்டிருக் கும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட மத்திய, மாநில அரசுகள் பல்வேறு வகையான வளர்ச்சித் திட்டங் களை வகுத்து செயல்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு

வளர்ச்சித் திட்டமும், சமுதாயத்தில் நலிவுற்ற, போதிய உணவு, உறைவிடமற்ற, ஏழைப் பெண்கள், வேலையற்ற கிராம மக்கள், குழந்தைகள், முதியோர்கள், படித்து வேலையின்றி இருப்பவர்கள் என பலதரப்பட்ட பிரிவினரின் வளர்ச்சியினை மையமாக வைத்தே தீட்டப்பட்டு செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இத்தகைய திட்டங்கள், கிராமத் தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங் களின் உறுப்பினர்களை வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

| வளர்ச்சித் திட்டங்கள் | பயன்கள் |
|---|---|
| 1. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் | வறுமைக்கோட்டிற்கு (தற்போதைய ஆண்டு குடும்ப வருமானம் ரூ. 11,000) கீழ் வாழும் குடும்பங்களுக்கு வருமானம் ஈட்டக் கூடிய தொழில்களை மேற்கொள்ள கடன் மற்றும் மானியம் வழங்குதல். |
| 2. ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு பெண்கள் மற்றும் குழந்தைகள் நிலையை மேம்பாடு அடைய செய்ய கடன் மற்றும் மானியம் வழங்குதல். |
| 3. கிராம இளைஞர்கள் பயிற்சி மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டம். | 18 முதல் 35 வயது உடைய படித்த கிராம இளைஞர்களுக்கு தொழில் சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டு கடன் மற்றும் மானியம் வழங்குதல். |
| 4. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் | கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பற்ற குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் கிராம சமுதாயத்திற்குப் பயனுள்ள நிலையான சொத்துக்களை ஏற்படுத்தவும் பள்ளிக்கட்டிடம், சாலை ,இதர க்ட்டிடங்கள்ஆகியவை அமைக்கவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. |
| 5. வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம் | கிராமப்புறங்களில் வாழும் வேலையற்ற குடும்பங் களுக்கு, போதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல். |
| 6. இந்திரா குடியிருப்புத் திட்டம் | அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உறைவிடம் (வீடு) இல்லாத சமுதாயத்தில், நலிவுற்ற, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மற்றும் இதர இனத்தைச் சார்ந்த ஏழை எளிய மக்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுத்தல். |
| 7. பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டம் | கிராம மக்களின் அடிப்படைத் தேவைக்கேற்ப ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல். |
| 8. மில்லியன் கிணறுகள் திட்டம் | வசதியற்ற தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி மற்றும் இதர இனத்தைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கிணறு வெட்ட மானியம் வழங்குதல். |
| 9. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம் | ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதிக்கும் தலா ரூபாய் 1 கோடி வழங்கப்படுகிறது. ஒரு தனி வேலைக்கு ரூபாய் 10 இலட்சத்திற்கு மிகாமல் வளர்ச்சிப் பணி சார்ந்த திட்டங்கள் மேற்கொள்ளுதல். |
| 10. சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம் | ஒவ்வொரு சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதிக்கும் தலா ரூபாய் 25 இலட்சம் வழங்கப்படுகிறது. உள்ளூர் தேவைக்கு ஏற்ப வளர்ச்சிப்பணித் திட்டப் பணிகளை மேற்கொள்ளுதல். |

மேற்கண்ட வளர்ச்சிப் பணிகள் மற்றும் இதர பணிகளை, மக்களின் தேவைக்கு ஏற்பவும், வளர்ச்சிப் பணிகளின் பயன்கள் உண்மையாக வறுமைக் கோட்டிற்கு கீழ்வாழும் ஏழை எளிய மக்களுக்கு சென்று சேரவும், வளர்ச்சிப் பணிகளின் திட்டமிடும் முறையில், பயன்பெறப் போகின்ற மக்களின் பங்கேற்பை மிக அதிக அளவில் பெறுவதன் மூலம் மக்களின் தேவையறிந்து உள்ளூர் நிலைமைக்கேற்ப திட்டமிட ஏதுவாக 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு முறையான காலத்தில் (பிரிவு 9(1), (2), 214) தேர்தல் நடத்தி உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவது கட்டாயமான விதிகளைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது. இதனால் தொடர்ச்சியாக மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு ஓர் அமைப்பின் வசம் அதிகாரங்கள் ஊராட்சிகள் சட்டத்தில் இடம் பெறாத ஓர் சிறப்பு அம்சமாக 'கிராம சபை' என்ற மக்கள் மன்றத்தை 1994 ஆம் ஆண்டின் ஊராட்சிகள் சட்டம் நடைமுறைப் படுத்தியுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தன்னிச்சையாக வளர்ச்சிப் பணிகளை நடைமுறைப்படுத்தாமல் அதனை மக்கள் மத்தியில் வைத்து, மக்களின் தீர்ப்பின்படி வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டள்ளது.

இந்த கிராம சபை எனப்படுகின்ற மக்கள் மன்றத்தில், அந்த கிராம எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழும் தகுதிபெற்ற வாக்காளர்கள் அனைவரும் உறுப்பினராக இருப்பர். இத்தகைய கிராம சபையானது ஓராண்டில் குறைந்தது மூன்று முறையேனும் கூட்டப்படுதல் வேண்டும். இவ்வாறான காலக்கெடு இருப்பதால், வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கிராம நலப் பணிகளின் செயல் பாட்டில் உள்ள குறைபாடுகள் மற்றும் கால தாமதம் உள்ளிட்ட பல்வேறு கருத்துக்கள், மக்களால் கலந்தாலோசிக்கப்பட்டு, மக்களின் பிரதிநிதிகள் மூலமாக நல்ல தீர்வுகள் காண ஏதுவாகிறது.

இத்தகைய அரிய வாய்ப்புகள் நிரம்பிய மக்கள் சபை என்ற சனநாயக அமைப்புகளைக் கொண்ட 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி கழக அரசு, 23 ஆண்டு காலமாக நடத்தப்பெறாமல் இருந்த சென்னை மாநகராட்சி தேர்தலையும், 10 ஆண்டுகளாக நடத்தப் படாமலிருந்த மற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மான தேர்தலையும் வெற்றிகரமாக நடத்தி முடித்தது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடத்தப்படும் இத்தகைய தேர்தல்கள் அரசினால் நடத்தப் பெறாமல், இந்திய அரசியல் சாசனப்படி அமைக்கப்பட்ட மாநிலத் தேர்தல் ஆணையம் மூலம் சட்டப்படி, நடுநிலையுடன், ஜனநாயக அடிப் படையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

இவ்வாறு நன்முறையில் நடைபெற்ற தேர்தலில் கீழ்க்கண்டவாறு உறுப்பினர்கள் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

**ஊரக உள்ளாட்சி அமைப்புகள்**

| | |
|---|---|
| கிராம ஊராட்சி உறுப்பினர்கள் | 95,657 |
| கிராம ஊராட்சி தலைவர்கள் | 12,584 |
| ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் | 6,499 |
| ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் | 384 |
| மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் | 649 |
| மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 28 |

**பேரூராட்சி மற்றும் நகராட்சி அமைப்புகள்**

| | |
|---|---|
| பேரூராட்சி உறுப்பினர்கள் | 10,173 |
| பேரூராட்சித் தலைவர்கள் | 635 |
| நகராட்சி உறுப்பினர்கள் | 3,392 |
| நகராட்சித் தலைவர்கள் | 104 |
| மாநகராட்சி உறுப்பினர்கள் | 474 |
| மாநகராட்சி மேயர்கள் | 6 |

தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மக்களின் பிரதிநிதிகளும் 25.10.1996 அன்று முழுப்பொறுப் பேற்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்புகள் (ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி) 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 240வது பிரிவின்படி, ஆண்டுதோறும் வளர்ச்சித் திட்டம் ஒன்றினைத் தயார் செய்திடல் வேண்டும். மாவட்டத் திட்டக் குழு ஒன்றை அமைக்கவும் இச்சட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அமைக்கப்படும் மாவட்ட திட்டக்குழு ஊராட்சிகள், தத்தம் மாவட்டத்தில் உள்ள வட்டார ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் மக்களோடு கலந்து ஆலோசித்து, மக்களின் அத்தியாவசிய தேவையை அறிந்து, அந்தப் பகுதியின் ஒட்டுமொத்த, சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்கான குறிக்கோள்களுடன் தயாரிக்கப்படும் வளர்ச்சித் திட்டங்கள் யாவற்றையும் ஒருங்கிணைத்து, மாவட்ட முழுமைக்குமான ஒரு வரைவு வளர்ச்சித் திட்டத்தினை தயாரிக்கும். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலகட்டத்தில், திட்டத்தின் குறிக்கோள்களுக்கு ஏற்ப, வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதிலும், செயல்படுத்துவதிலும், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்வதிலும் ஊராட்சி நிறுவனங்கள் கணிசமான பங்கை வகிக்கும். வளர்ச்சித் திட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், தனி

நபர்கள் பயனடையும் வகையில் திட்டங்களுக்கான பயன் அடைவோரை, தகுதியின் அடிப்படையில் கண்டறிந்து தேர்ந்தெடுக்கும் பொறுப்பு ஆகியன கிராம ஊராட்சி அமைப்புக்களையே சாரும். மேலும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் தவிர அரசினால் ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கப்படும் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதலும் அடங்கும்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை, வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிர்வாக உதவிகள் அளித்தல், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்படும் திட்டங்களை நடைமுறைப் படுத்துதல், மேலாய்வு மற்றும் முன்னேற்றம் குறித்த புள்ளி விவரங்களை மாவட்ட அளவில் வழங்குதல் மற்றும் திட்டங்களை மதிப்பீடு செய்வதில் உதவுதல் போன்றவையும் இந்த பணியில் சேரும். மாவட்ட ஊராட்சி, மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் பரவலாக்கப்பட்ட திட்டத்தைத் தயாரித்து செயல் படுத்துதல், மாவட்ட அளவில் நிறைவேற்றப்படக் கூடிய மத்திய நிதி உதவி பெறும் திட்டங்களை செயல்படுத்துதல், மேலும் மாவட்ட அளவில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் திட்டங் களைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடல், முதற்கட்டமாக இதில் சமூக நலம், மதிய உணவு, ஊரகக் குடிநீர் வழங்கல், ஊரகச் சாலைகள், சிறு பாசனம், ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் நலத் திட்டங்கள் ஆகியனவும் அடங்கும்.

நடப்பு ஆண்டில் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்பு வளர்ச்சித் திட்டம், மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகிய உதவித் திட்டங்களுக்கு மாநில அரசு ரூ. 1,27,317 கோடி நிதி வழங்கியுள்ளது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் தாழ்த்தப் பட்டவர் களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், பழங்குடி யினருக்கும், இந்த நிதியின் மூலம் நடப்பாண்டில் எழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் கட்டித் தரப்படும்.

வளர்ச்சித் திட்டங்கள் தவிர, ஊராட்சி வரிகளை கணித்தல், விதித்தல் மற்றும் வசூலித்தல், ஊராட்சி சொத்துக்களை பராமரித்தல் மற்றும் அவைகளை மேம்பாடடையச் செய்தல், தெரு விளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல், ஊரகக் குடிநீர் விநியோகம், சந்தைகள், திருவிழாக்கள், அங்காடிகள் முதலியன உள்ளடங்கிய பொது சுகாதாரம், துப்புரவுப் பணிகள் மற்றும் கழிவுகளை அகற்றுதல், குளங்கள், குட்டைகள் மற்றும் நிலையான பாசன நிலைகளைப் பராமரித்தல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல், ஊராட்சி சாலைகளை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் தரம் உயர்த்துதல், பொது விநியோக அமைப்புகள், மதிய உணவு மையங்கள், சுகாதார துணை நிலையங்கள், தொடக்கப் பள்ளிகள் போன்றவற்றை ஆய்வு செய்தல் மற்றும் கிராம அளவில் நிறைவேற்றப்படும் அரசு திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகியன ஊராட்சியின் முக்கியப் பணிகள் ஆகும்.

இவ்வாறாக, புதிதாக பொறுப்பேற்றிருக்கும் உள்ளாட்சி அமைப்புகள்தான், உள்ளூர் மக்களின் நிலைமையை நன்கு புரிந்து கொண்டு உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப அரசின் நிதி ஆதாரத்துடன் வளர்ச்சித் திட்டங்களை தீட்டி, பயனாளிகளைத் தேர்வு செய்து, திட்டங்களைத் திறம்பட செயல்படுத்தி, செயல்படுத்தப்பட்ட வளர்ச்சிப் பணிகளை மேலாய்வு செய்து, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் ஒட்டு மொத்த நிலைமை யினை மேம்படுத்திட உறுதியுடன் தொண்டாற்றி வருகிறது. இப்படிப்பட்ட ஆக்கப்பூர்வமான பணிகளை செவ்வனே ஆற்றிவரும் இந்த உள்ளாட்சி அமைப்புக்களே, நம் நாட்டின் வளர்ச்சிப் பணிக்கு அச்சாணி என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சட்டசபை உறுப்பினர்கள் அரசாங்கம் என்பதைச் சமூக நன்மைக்கு ஏற்றதோர் அமைப்பாக, அதுவும் மக்களின் உண்மை பிரதிநிதித்துவம் கொண்ட பஞ்சாயத்தாகத்தான் கருத வேண்டுமேயொழிய, அதை ஓர் அதிகார அமைப்பாகவோ, கவுரவப் பதவி வகிக்கும் அமைப்பாகவோ கருதக் கூடாது.

— பெரியார்

# வேளாண் வளர்ச்சியில் அரசு மானியங்களின் பங்கு

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வேளாண் வளர்ச்சி உயிர்நாடியாகும். மொத்த மக்கள் தொகையில் 70 சதம் விவசாயத்தையே சார்ந்து வாழ்கின்றனர். பெருகிவரும் மக்கள் தொகையின் உணவுத்தேவைகளை எதிர்கொள்வது, உணவுத் தன்னிறைவு, விவசாய விளைபொருட்கள் மூலப் பொருட்கள் உற்பத்தி, அதனைத் தொடர்ந்த தொழில் உற்பத்தி, ஏற்றுமதி வாய்ப்புகள், கிராமப்புற வேலைவாய்ப்புகள் போன்ற பல்வேறு அத்யாவசிய நோக்கங்களைக் கொண்ட வேளாண் வளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் வேளாண் பெருமக்களில் மிகப் பெரும்பாலானோர் பொருளாதார, சமூக மற்றும் உயர்கல்வி நிலை போன்றவற்றில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அவர்களின் நலனை பேணிக்காத்து அவர்களுக்கு புத்துயிர் அளித்து புதிய பாதையை வகுத்து பொருளாதார மேம்பாட்டிற்கு உறுதுணையாக நிற்பது வேளாண் துறையாகும்.

இத்துறையின் செயல்பாடுகள், பல்வேறு காலகட்டங்களில் ஏற்படும் சூழ்நிலை உந்துகைக்கு உட்பட்டு கிராமப்புற மக்களின் நலனில் அக்கறைகொண்டு, இதர துறைகளைப் போலல்லாமல் இத்துறை பணியாளர்கள் விவசாயிகளிடம் சென்று ஏற்றமிகு நவீன தொழில்நுட்பங்களை கழனிகளிலேயே தந்து செயல்பட்டு வருகின்றனர்.

முதலாவது பசுமைப்புரட்சி எட்டப்படும் முன் விவசாயப் பெருமக்கள் தொன்று தொட்டு பயிரிட்டுவந்த உள்ளூர் இரகங்களையே பயிரிட்டு வந்தனர். குறைந்த மகசூல் திறன், நோய் தாக்கும் தன்மை மற்றும் நீண்டகால பயிர் போன்ற நிலை களினால் உயர்விளைச்சல் பெற இயலாத நிலையில் உயர்விளைச்சல் இரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அந்த காலகட்டத்தில் நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள் கண்டறியப்பட்டு புதிய இரகங்களின் முழுவிளைச்சலைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தரமான விதைநெல் உற்பத்தி செய்து கொள்முதல் செய்யப்படும் பொழுது விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

மண்ணிற்கு தேவையான அங்ககப்பொருள்கள் தொழுஉரம் மற்றும் குப்பை எரு மூலம் மட்டுமே பெறப்பட்டு வந்த சமயத்தில் செஸ்பேனியா பசுந்தாள் உரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த பசுந்தாள் உரத்தை உபயோகிக்க விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்படாத

---

மாண்புமிகு **திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்,**
வேளாண்மைத் துறை அமைச்சர்

நிலையில் இலவசமாக செஸ்பேனியா விதைகள் ஆரம்பத்தில் வழங்கப்பட்டன. பின்னர் காலஞ் செல்லச்செல்ல அதன் அவசியம் மற்றும் முக்கியத் துவத்தை உணர்ந்து செயல்படத் துவங்கினர். பிறகு மான்யவிலையில் பசுந்தாள் உர விதைகள் விநியோகம் தொடங்கின.

உயர் விளைச்சல் இரகங்களின் முழு உற்பத்தித் திறனை வெளிக்கொண்டுவர இரசாயன உரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. முதன்முதலாக இறக்கு மதி செய்யப்பட்ட யூரியா, அமோனியம் சல்பேட்டு போன்ற உரங்களை கழனிகளில் இலவசமாக இட்டு அவற்றின் செயல்பாடு குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. அதன் பயனை உணர்ந்த விவசாயிகள் பின்னர் இரசாயன உர உபயோகத்தை மிக முக்கியமாகக் கருதி ஏற்றுக்கொண்டனர். இதன் உபயோகம் அதிகரித்து, உற்பத்தி செய்யத் துவங்கியதும் விலை ஏற்றத்தால் இதன் உபயோகம் தடைபட துவங்கிய சமயத்தில், மான்ய விலையில் இரசாயன உரங்கள் விநியோகிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இரசாயன உரங்கள் மீதான கட்டுப்பாடு தளர்த்தப்பட்டபொழுது விலை யேற்றத்தினால் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயி களின் நலன் பாதிக்கப்படாமல் இருக்க சலுகை விலையில் இரசாயன உர விநியோகம் மேற் கொள்ளப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளது.

இது தவிர மண்ணின் தன்மை, சுற்றுச்சூழல் மாசுபடுதல், தரமான விளைபொருட்கள், போன்றவற்றை பாதுகாக்கும் வகையில் உயிரியல் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில் இரசாயன உரத்தின் உபயோகத்தை ஓரளவுக்கு சிக்கனப்படுத்தும் நடவடிக்கையாக உயிர்உர உபயோகம் அறிமுகப்படுத்தப்பட்டது. முதல் கட்டமாக வாயு மண்டலத்திலிருந்து நைட்ரஜன் வாயுவை கிரகித்து மண்ணில் அளிக்கும் நீலப் பச்சைப்பாசி, அசோலா போன்ற உயிர் உரங்களை உற்பத்தி செய்து மிகவும் குறைந்த விலையில் விநியோகிக்கப்பட்டது. பின்னர் இதன் உபயோகத் தில் எழுந்த சாதகமான நிலை மற்றும் நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் உயிரியல் உரங்களான அசோஸ்பைரில்லம், ரைசோபியம், அசடோபேக்டர், பாஸ்போ பேக்டீரியா போன்ற வைகளை பக்குவப்படுத்தி கழனிகளில் இட்டு உற்பத்தியை பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. தற்போது இந்த உயிரியல் உரங்கள் அரசு உற்பத்தி மையங்கள் மூலம் உற்பத்தி செய்யப் பட்டு அடக்க விலைக்கே விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மண்ணின் தன்மை, சத்துக்கள் நிலை, பயிர் சாகுபடிக்கு ஏற்ற சத்துக்கள் நிலை மற்றும் மண்ணின் சாதகமற்ற நிலை, பாசன நீரின் தன்மை போன்றவை களை விவசாயிகள் அறிந்து பயிர்சாகுபடியில் அமோக விளைச்சல் பெற மண்பரிசோதனைக் கூடங்கள் மூலம் மண் ஆய்வுப்பணி மற்றும் பாசன நீர் ஆய்வுப்பணிகள் உழவர்களுக்கு மிகக்குறைந்த கட்டணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை கள் மூலம் மண்ணின் களர்தன்மை கண்டறியப்பட்டு சீர்திருத்த நடவடிக்கையாக ஜிப்சம் மான்ய விலை யில் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

மேலும், நுண்ணூட்டச்சத்துக்கள் குறை பாடுள்ள பகுதிகளைக் கண்டறிந்து சிங்க்சல்பேட் மானிய விலையில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விவசாயிகள் தொன்றுதொட்டு பயன்படுத்தி வந்த இரகங்கள் பல்வேறு பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களுக்கு உட்பட்டதால் உயர்விளைச்சல் இரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டபொழுது பூச்சிநோய் தாங்கும் திறனுடன் வெளியிடப்பட்டன.

இருப்பினும் ஒட்டுமொத்த பூச்சி தாக்குதல் ஏற்படும் காலங்களில் ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுப்பதன் மூலம் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் பரந்த அளவில் பூச்சிமருந்து சலுகை கட்டணத்தில் தெளிக்க துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது.

இதுபோன்று பெருமளவு பாதிப்பு ஏற்படுத் தும் குலைநோய், பயறுவகைகளில் காய்ப்புழு தாக்குதல் போன்றவற்றுக்கு சிறப்பு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பயிர் உற்பத்தியுடன் இணைந்த திட்டங்களில் பயிர்பாதுகாப்பு மருந்துகள் மற்றும் பயிர்பாதுகாப்பு கருவிகள் போன்றவற்றுக்கு மான்ய உதவிகள் வழங்கப்பட்டு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டன.

பூச்சி மருந்து பொது விற்பனை நடவடிக்கை களை வேளாண்துறை மூலம் மேற்கொள்வதில்லை என்று அரசு எடுத்த முடிவினைத் தொடர்ந்து பூச்சிமருந்து இருப்புவைத்தல் மற்றும் விற்பனை நடவடிக்கைகள் அவசரகால தேவைக்கு மட்டும் மேற்கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பு, மண்ணின் நச்சுத்தன்மை போன்ற பாதிப்புகளைக் களையும் வகையில் உயிரியல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடரப்பட்டன. இதன் மூலம் கரும்பு, மணிலா, தென்னை, பருத்தி

போன்ற பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்து மான்ய விலையில் விநியோகிக்கும் பணி மேற் கொள்ளப்பட்டது.

பயிருக்கு நன்மை செய்யும் பூச்சிகளை கண்டறிந்து, அவற்றை பெருக்கம் செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு முதல் கட்டமாக உழவர் வயல்வெளிப்பள்ளிகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் பயிற்சிபெற்ற தொழில்நுட்ப அலுவலர்களைக் கொண்டு உழவர் களுக்கு களப்பயிற்சிகள் அளிக்கப்பட்டன. தற்போது இந்தவகை பூச்சிகளை உற்பத்தி செய்ய மாநிலம் முழுவதும் எட்டு இடங்களில் உயிரியல் கட்டுப்பாட்டு நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றின்மூலம் உற்பத்தி செய்யப்படும் நன்மை செய்யும் பூச்சிகள் மற்றும் ஒட்டுண்ணிகளை விவசாயிகளுக்கு சலுகை விலையில் விநியோகம் செய்வதன்மூலம் பயிர்பாதுகாப்பு செலவினை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் இரசாயன பூச்சிக்கொல்லிகளைத் தவிர்த்து உயிரியல் பூச்சிக்கொல்லிகளை அதிக அளவில் பயன்படுத்தி விவசாயிகளின் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தரமான விளைபொருள் உற்பத்தி போன்றவற்றுக்கு கவனம் செலுத்தப் படுகின்றது.

ஆரம்ப காலங்களில் விவசாயிகள் பரம்பரை யான வேளாண்கருவிகள் கொண்டு சாகுபடிப் பணிகளை மேற்கொண்டு வந்தனர். தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்தி பெருக்கத்தேவை போன்ற நிர்பந்தங்களினால் நவீன வேளாண் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. டிராக்டர்கள், டிரெய்லர்கள், பவர்டில்லர்கள், தெளிப்பான்கள், தூவான்கள் போன்றவை விவசாயிகளுக்கு சலுகை கட்டணத்தில் வாடகைக்கு வழங்கப்பட்டு வந்தன.

பெருகிவரும் தேவை, சுயவேலை வாய்ப்பு போன்றவற்றை கருத்தில்கொண்டு சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகள் சொந்தமாக இந்த வேளாண்கருவிகள் மற்றும் பயிர்ப்பாதுகாப்பு கருவிகளை வாங்கி பயனடையும் வகையில் மான்ய விலையில் இந்த கருவிகள் வழங்கப்பட்டன. இவற்றை சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகள் தங்களின் உபயோக காலம் தவிர இதர காலங்களில் வாடகைக்கு விட்டு பயன்பெற வழிவகை செய்யப்பட்டது.

வேளாண்மையை இயந்திரமயமாக்கும் நோக்கத்துடன் மத்திய அரசு நிதியுதவியுடன் பவர் டில்லர்கள், கதிரடிக்கும் இயந்திரங்கள், சிறிய டிராக்டர்கள் போன்றவை சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு மான்யவிலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

நிலத்தடி நீரின் அளவு போதுமானதாக இல்லாததால் இருக்கும் நீரை திறம்பட உபயோகிக்க சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர் பாசனக்கருவிகள் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு மான்ய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

பல்வேறு நவீன தொழில்நுட்பங்களை விவசாயப் பெருமக்கள் புரிந்து கொண்டு, தொழில்நுட்ப உத்திகளைக் கையாளுவதற்கு ஏதுவாகத் தொழில்நுட்ப அலுவலர்களின் மேற பார்வையில் முக்கிய பயிர்களில் செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டு தொழில்நுட்பத்தின் முழுப் பயனை விவசாயிகள் நன்கு உணர்ந்து கொள்ள இடுபொருட்களுக்கு மான்யம் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றது.

உணவுப் பொருட்கள் மட்டுமின்றி பொதுநலம் கருதி வேளாண்காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக வீட்டுத்தோட்டத்தில் முருங்கை மற்றும் பப்பாளி நடவு செய்ய கன்றுகள் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இறுதியாக, பல்வேறு பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் விவசாயி களிடையே போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தி, நவீன சாகுபடி தொழில்நுட்பங்களைக் கடைப் பிடித்து உயர்விளைச்சல் பெறும் வகையில் பயிா விளைச்சல் போட்டிகள் மாநில மற்றும் மாவட்ட அளவில் நடத்தி பரிசுகள் வழங்கப்படுகின்றன.

பொருளாதாரச் சமத்துவம்தான் சுதந்திரத்தின் உயிர்நாடி. முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இடையேயுள்ள நிரந்தரப் பூசலை அகற்றுவதுதான் பொருளாதாரச் சமத்துவத்திற்கான ஒரே வழி.

– காந்தியடிகள்

சோழவளநாடு சோறுடைத்து என்ற அடைமொழி இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நீர்வளம் மிக்க காவிரியின் மேல் கல்லணையைக் கட்டி, காவிரி டெல்டா பகுதிக்கு செழுமை கூட்டி, யானை கட்டி போர் அடிக்குமளவு பயிர் விளையச் செய்த கரிகால் சோழனின் ஆற்றலால் அன்று விளங்கி, இன்றும் உண்மையாகத் திகழ்கிறது என்பது தமிழ்நாட்டிற்கு உண்டான சிறப்பு. அன்று அடிகோலிட்டு கட்டப்பட்ட கல்லணை அகில உலகிலேயே மணற்பாங்கான ஆற்றுப் பகுதியில் பொறியியல் ரீதியில் கட்டுவிக்கப்பட்டு இன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அணைகளைனைத்திலும் மிகத் தொன்மை வாய்ந்ததென்று ஒப்புக் கொள்ளப்படுகிறது என்பதும் தமிழ்நாட்டுப் பொறியியல் திறனுக்குப் பெருமை சேர்க்கிறது.

# ஆற்று நீரும் ஊற்று நீரும் தமிழகத்திற்குத் தந்த ஏற்றம்

மாண்புமிகு **திரு. துரைமுருகன்**

பொதுப்பணித் துறை அமைச்சர்

இந்திய நாட்டில் பெரிய நதிகள் என வரிசைப்படுத்தியுள்ள 14 நதிகளில் 13-ஆம் இடம் பெறும் காவிரி நதிதான் தமிழ்நாட்டில் ஓடும் பெரிய நதி, ஜீவ நதி. மற்றவை யாவும் கார்காலத்தில் வெள்ளம் பெருகி கடிதில் வடிந்து விடும் சிறிய நதிகள் என்றே கொள்ள வேண்டும். அவற்றை,

"காவிரி, தென் பெண்ணை, பாலாறு

தமிழ் கண்டதோர் வைகை, பொருணை நதி"

என நம் பாரதியாரே வரிசைப்படுத்தி விட்டார். இவையன்றி சில சிற்றூர்களும் சேர்த்து தமிழ் நாட்டில் ஆற்று வடிகால் பகுதிகள் 33 எனக் கணக்கிடுகிறோம்.

ஆற்று நீரானாலும், ஊற்று நீரானாலும், மற்ற எந்த நீரானாலும் அவற்றிற்கு மூலம் ஒன்றே. அதுதான் மழை. துரதிர்ஷ்டவசமாக தமிழ் நாட்டிற்கு, அனைத்திந்தியாவிலும் பரவி வலுத்த மழை பொழியும் தென் மேற்குப் பருவக் காற்றினால் பலன் அதிகம் கிடைப்பதில்லை. காரணம் மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர் ஒரு தடுப்புச் சுவராகிறது. மாறாக கார்காலத்தில் அதாவது நவம்பர், டிசம்பர் மாதங்களில் கடற்கரையோரம் சூறாவளிக் காற்றோடு இணைந்து பெரு மழை பொழியும் வடகிழக்குப் பருவக் காற்றைத் தான் நாம் நம்பி வாழ்கிறோம். இது அடிக்கடி பொய்த்துப் போவதன்றி வெள்ளச் சேதாரமும் உண்டாக்குகிறது. மூன்று வருடங்களுக்கொரு முறை அம்மழை குன்றி வறட்சியை சந்திக்க நேருகிறது. இந்த வருடமும் தென் தமிழ் நாட்டில் வறட்சி மேலிட்டு குடிதண்ணீர் தட்டுப்பாடும் ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் நீர்வளம் மிகக் குறைவு. ஒரு தனி நபருக்கென கணக்கிட்டால் ஆண்டொன்றுக்கு இந்திய நாட்டின் நீர் வளம் சராசரி 2208 கனமீட்டர் ஆகும். தமிழ்நாட்டில் அது 651 கனமீட்டர்தான். அண்டை மாநிலங்களான கர்நாடகத்தில் 2124 கன மீட்டர் என்றும் கேரளத்தில் 2435 கனமீட்டர் எனவும் ஆந்திரத்தில் 2744 கன மீட்டர் எனவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் மழை காலத்தில் ஆறுகளிலும் ஓடைகளிலும் ஓடும் நீரைத் தடுத்து, தேக்கி, நீர் நிலைகளை உண்டாக்கி பாசனத்திற்கும், குடி நீருக்கும் பயன்படுத்த பல கட்டுமானங்களை உருவாக்கியிருக்கிறோம். அதனன்றி பூமியில் ஊறிச் சென்று நில நீர் மட்டத்தைச் சேரும் ஊற்று நீரையும் பயன்படுத்த பல வழிமுறைகளை அனுசரித்து வருகிறோம்.

மக்கள் கூடி குக்கிராமங்களில் வாழ முனைந்த நாட்களிலேயே ஊற்று நீரைத் தேடி கிணறுகள் வெட்டி குடிநீருக்கும் உணவு உற்பத்தி பெருக்க பாசனத்திற்கும், உபயோகிக்கலாயினர். பின் ஆழ் கிணறுகள், குழாய் கிணறுகள் என பல முன்னேற்றங்களைக் கண்டோம். இன்று தமிழ் நாட்டில் குடிநீரைப் பெற 5,57,694 கிணறுகளும், பாசன வசதிகளைப் பெற 18,39,754 கிணறுகளும் பயன்படுத்தி வருகிறோம். மூலை முடுக்குகளுக்கும் குக்கிராமங்களுக்கும் இந்தியாவிலேயே முன்னோடியாக மின்சார வசதிகளை கொண்டு சென்று 13,18,671 பாசன கிணறுகளுக்கு மின்சக்தி கிடைக்கச் செய்திருக்கிறோம். கிணற்று நீர்ப்பாசனத்திற்கு உதவியாக மின் கட்டணமும் இரத்து செய் திருக்கிறோம்.

தமிழ்நாட்டில் கிணற்றுப் பாசனம் மின் இணைப்பு பெற்றதிலிருந்து மிக விரைவாக வளர்ந்து தற்போது சிறு பாசனத்தில் ஒரு முக்கிய அம்சமாகத் திகழ்கிறது. வளர்ச்சியைக் கீழ்க்காணும்அட்டவணை குறிக்கிறது.

| ஆண்டு | பாசனக் கிணறுகள் எண்ணிக்கை | கிணற்றுப் பாசனம் பெறும் நிலப்பரப்பு (இலட்சம் ஹெக்) | மின் இணைப்பு பெற்ற பாசனக் கிணறுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| *1960-61* | *8,74,061* | *5.97* | *98,481* |
| *1970-71* | *12,23,197* | *7.75* | *2,08,485* |
| *1980-81* | *16,67,514* | *10.67* | *9,45,371* |
| *1990-91* | *17,70,140* | *10.59* | *13,18,671* |

தமிழ்நாட்டின் பூமிப் பாங்கோ 68 சதவீதத்திற்கு மேல் பாறையோடொத்தது. நிலத்தடி நீர் கணிசமாக ஊறிப் பெருகுவதற்கு வாய்ப்பில்லை. அதற்கான மழையும் போதாது. மக்களோ தங்கள் தேவைகளுக்காக மேலும் மேலும் நிலத்தடி நீரை இறைத்து விடுவதால் நில நீர் மட்டம் கீழே போய்க் கொண்டிருக்கிறது. அதனால் நிலநீரின் தரம் குறைவதன்றி மேலும் ஊற்று நீர் கிடைப்பதரி தாகிறது. பாலாற்றின் கரையில் பாலென ஊறிக் கொண்டிருந்த ஊற்று தற்போது வற்றிப் போய் விட்டதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆக நிலத்தடி நீரை இறைப்பதிலும் ஒரு கட்டுப்பாடு வேண்டும் எனப் பெறப்படுகிறது.

அடுத்து தமிழ்நாட்டின் பாசனக் கட்டுமானங்களிலே தலையாயதாக விளங்குவது ஏரி, குளங்கள். இவை நம் முன்னோர்களால் பல நூற்றாண்டுகளாக தமிழ் நாட்டின் பூமிச் சரிவுக்கும், கரையோரம் பெய்யும் மழைக்கும் ஒத்ததாக, அடுத்தடுத்து ஒரு சங்கிலித் தொடராக கட்டுவிக்கப்பட்டு கிராம மக்களின் வாழ்க்கையில் ஓர் அங்கமாக பிணைந்து இணைந்துவிட்டன. மக்களே அவைகளின் பராமரிப்பை ஏற்பதன்றி அவற்றின் பலன்களையும் மிக அழகாக பங்கிட்டுக் கொள்கிறார்கள். மழை காலத்தில் தக்க சமயத்தில் அவ்வேரிகளை நிரப்பி, பாசனத்திற்கு வேண்டியபடி நீரை பாசனக் கால்வாய்களில் பாயச் செய்து காலங்காலமாக முறைப்படுத்தப்பட்ட பழக்கத்தை அனுசரித்து நீர் எல்லோருக்கும் கிடைக்கும்படி பங்கிட்டுக் கொள்கிறார்கள்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த சிற்றேரிகள் சிறிதும் பெரிதுமாக சுமார் 39,000 உள்ளன. ஆனால் தற்போது அவற்றின் பராமரிப்பு குன்றி அவற்றால் பயன்பெற்று வந்த பாசனப் பரப்பும் குறைந்து கவலைக்கிடமாகியுள்ளது. அவற்றைச் சீர்படுத்தி பழையபடி பயன்தரச் செய்வதற்கும் அவற்றின் நீர் நிர்வாகத்தை மேம்படச் செய்யவும் மக்களை ஊக்குவித்து குடிமராமத்துப் பாங்கை மறுபடியும் மலரச் செய்யவும் நாம் உலக வங்கியின் உதவி நாடியும், ஐரோப்பா நாடுகளின் குழுமத்தின் மூலம் பணவசதி பெற்றும் பெரிதும் முயன்று வருகிறோம்.

கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் சிறிது கவலையூட்டுவதாக இருப்பினும் ஏரிப்பாசனம் குன்றிய அளவு கிணற்றுப் பாசனம் பெருகி வருகிறதென்பது உண்மை.

| ஆண்டு | ஏரிப் பாசனத்தில் பயன் பெறும் பரப்பு (ஹெக்டேர்கள்) |
|---|---|
| *1960-61* | *9,36,400* |
| *1970-71* | *8,97,923* |
| *1980-81* | *5,90,151* |
| *1990-91* | *5,30,933* |

அடுத்து ஆற்றுப் பாசனத்தைப் பார்ப்போம். கரிகாலச் சோழனுக்கும் முன்பே சோழ நாட்டின் காவிரி டெல்டாப் பகுதியில் ஆற்றுப் பாசனம் பெற்று, வேளாண்மை செழித்தோங்கியதென்பது வரலாறு. இந்தியாவிலேயே சிந்து நதித் தீரத்திலும் காவிரி டெல்டாவிலும் தான் அன்று பாசனம் இருந்ததென்பர். இன்றும் அதே பழைய டெல்டாவில் 1505 முதன்மைப் பாசனக் கால்வாய்கள் மற்றும் சுமார் 18,450 கி.மீ. கிளைக் கால்வாய்களினால் பாசனம் பெற்று தஞ்சை தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமென விளங்குகிறது.

ஆங்கிலேய ஆட்சிக்கு முன்னரே நம் முன்னோர்கள் பெரிய சிறிய அணைக்கட்டுகள் பல அமைத்து ஆறுகள், அவற்றின் கிளை, சிற்றாறுகள் இவற்றில் பாயும் நீரைத் திருப்பி கால்வாய்களை வெட்டி கொண்டுசென்று ஏரிகளில் நிரப்பியும் நிலங்களில் பாய்ச்சியும் வேளாண்மை வளம் பெறச் செய்தனர். இவ்வகை அன்று ஆண்ட சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள், மற்ற பல சிற்றரசு களின் பங்கு மிகையானது. பாலாறு, பொய்நி, செய்யாறு இவற்றின் பாசனக் கால்வாய்கள், பெண்ணாற்றின் மேலுள்ள திருக்கோயிலூர் அணைக் கட்டுக் கால்வாய்கள், பவானி ஆற்றின் கொடிவேரி, காளிங்கராயன் கால்வாய்கள், அமராவதியின் 25

கால்வாய்கள், நொய்யலாற்றின் 22 கால்வாய்கள், காவிரிக் கரைகளில் சேலம், திருச்சி மாவட்டங்களில் பாயும் 17 கால்வாய்கள், வைகை ஆற்றின் கரைகளில் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள நூற்றுக் கணக்கான ஏரிகளை நிரப்பும் கால்வாய்கள், தாமிரபரணி ஆற்றின் மேல் அமைந்த அணைக்கட்டு களிலிருந்து வெளிப்படும் 7 முக்கிய கால்வாய்கள், அதிலேயே சிற்றாற்றில் மேலுள்ள பல அணைக் கட்டுகளின் கால்வாய்கள், கோதையாறு கால் வாய்கள் இப்படி பல ஆயிரக்கணக்கான ஹெக்டேர் கள் பாசனம் பெற உதவின.

ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில், பொறியிய லும், அறிவியலும் வளர்ந்ததையொட்டி இரு பெரும் அணைகளைக் கட்டி ஆயிரக்கணக்கான ஹெக்டேர் கள் நீர்ப்பாசனம் பெற திட்டங்களை சாதித்தனர். அவை பெரியாறு அணையும், மேட்டூர் அணையும் ஆகும். 1897ல் முடிக்கப்பட்ட பெரியாறு அணை ஒரு திசையில் பாயும் நீரை திசை திருப்பி மற்றொரு திசையில் பாயும் ஆற்றில் கலக்கச் செய்ய உலகிலேயே முதன் முறையாக எடுத்துக் கொண்ட ஓர் சாதனை. 1934ல் முடிக்கப்பட்ட மேட்டூர் அணையோ அன்றிருந்த நிலையில் ஆசியாவிலேயே மிகப் பெரிய நீர்த் தேக்கத்தை உண்டாக்கிய ஒன்று.

நாடு சுதந்திரமடைந்த பின் நாம் வகுத்த ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் சிறிய பெரிய நீர்த்தேக்கங்கள் பல அமைத்து பாசனப் பரப்பை விரிவுபடுத்தியிருக்கிறோம். மேலும் நீர் வளம் இல்லாத குறையால் இனி பெரிய நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் ஏதும் தீட்ட முடியாத நிலையில் இருக்கிறோம்.

கீழ் அட்டவணையில் பாசனத் திட்டங்களும் பயன் பெற்ற பாசனப் பரப்பும் கொடுக்கப் பட்டுள்ளன.

மேற்சொன்ன ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் செயல் படுத்திய திட்டங்கள் அத்தனையும் பெரும் பயனைத் தந்திட்டது எனினும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்று பரம்பிகுளம் ஆழியாறு திட்டமாகும். இம் மாபெரும் திட்டத்தின் மூலம் மேற்கு நோக்கி கேரள நாட்டில் பாயும் பாரத்புழா, சாலக்குடி ஆறுகளின் உப நதிகளின் மேல் எட்டு அணைகளைக் கட்டி தேக்கிய நீரை கால்வாய்கள் மற்றும் சுரங்கங்களின் மூலம் இணைத்து மேற்குத் தொடர்ச்சி மலைகளைக் கடந்து கிழக்கு முகமாகப் பாயச் செய்து, பாசனக் கால்வாய்கள் பல வெட்டி, கோவை பெரியார் மாவட்டங்களில் சுமார் 4 இலட்சம் ஏக்கர் பாசன வசதி பெறச் செய்திருக்கிறோம். பல மெகாவாட் மின் உற்பத்தித் திறனும் பெற்றோம். இத்திட்டத்தினால் கேரள மாநிலமும் பாசனப் பலனும் மின் உற்பத்திப் பயனும் பெற்றதெனினும் தமிழ்நாடு, கேரள

| திட்டக் காலம் | திட்டங்களின் எண்ணிக்கை | பாசனம் பெறும் நிலப்பரப்பு (ஆயிரம் ஹெக்) |
|---|---|---|
| ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு முன் 1951 வரை | 23 | 1101 |
| முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951-56) | 9 | 75 |
| இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1956-61) | 5 | 71 |
| மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் (1961-66) | 4 | 27 |
| வருடாந்திரத் திட்டங்கள் (1966-67) (1967-68) | 3 | 31 |
| நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் (1969-74) | 10 | 31 |
| ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் (1974-78) | 11 | 48 |
| வருடாந்திரத் திட்டம் (1978-80) | 6 | 6 |
| ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் (1980-85) | 19 | 30 |
| ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் (1985-90) | - | 40 |
| வருடாந்திரத் திட்டம் (1990-91) (1991-92) | - | 11 |
| எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1992-97) | - | 1 |
| ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டபடி (1997-2000) | - | 10 |
| மொத்தம் | | 1484 |
| நீராதாரத்தின்படி அதிகப்படி பாசனம் கொடுக்கக்கூடிய பரப்பு | | 1500 |

மாநிலங்களின் மக்கள், அரசியல்வாதிகள் காட்டிய முற்போக்குக் கணிப்பும், ஒத்துழைப்பும் தான் இம் மகத்தான திட்டம் உருவாக உதவியது எனக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

இப்படி தமிழ்நாட்டின் ஆற்று நீரையும் ஊற்று நீரையும் செவ்வனே பயன்படுத்த பல நூற்றாண்டு களாக சாதனை பல புரிந்திருந்தாலும் இன்றைய நிலையில் மேலும் புதிய திட்டங்களைத் தீட்ட நீர்வளம் இல்லாத நிலையில் செயல்பாட்டில் இருக்கும் திட்டங்களின் கட்டுமானங்களை சீர்படுத்தியும் அவற்றிலிருந்து பெறும் நீரின் உபயோகத்தை மேம்படுத்தவும் பல முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

உலக வங்கியின் பண உதவியுடன் நாம் செய்து முடித்த பெரியாறு வைகை மேம்பாட்டுத் திட்டம் அப்பகுதி மக்களுக்கு பெரும் திருப்தியைத் தந்திருக்கிறது. அதே போன்று மற்ற பல ஆற்றுப் படுகைகளில் நீர் மேலாண்மையைக் கருத்தில் கொண்டு நீர்ப்பாசன கட்டுமானங்களை நவீனப்படுத்த ரூ.*1140* கோடி செலவில் உலக வங்கியின் பண உதவியுடன் திட்டம் தீட்டி தொடங்கி இருக்கிறோம். இப்படி இன்னும் பல நவீன, பொறியியல், அறிவியல் வளர்ச்சிகளை துணை கொண்டு நீரின் உபயோகத்தை சிக்கனமாக்கி நீரின் பயனைப் பெருக்கி தமிழ் நாட்டின் ஏற்றத்திற்காக வளர்ச்சி கூடிக் கொண்டே போகவும் மின்துறை, வேளாண்மைத் துறைகளுக்கு உறுதுணை யாகவும் நீர் வளம், நீர்ப் பாசனத்துறை என்றும் கை கொடுக்குமென உறுதி கொண்டிருக்கிறோம்.




சட்டப் பேரவையில் இந்திய விடுதலை 40-வது ஆண்டு விழா 1987
மேதகு ஆளுநர் திரு. சுந்தர்லால் குரானா

# அவையில் பதற்றம் தணிவித்தல்

மாண்புமிகு **முனைவர் மு.தமிழ்க்குடிமகன்**

தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும்
இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்

'**ஆ**றின கஞ்சி பழங்கஞ்சி' என்பார்கள். பழைய சோறு சுவையானதுதான். ஆனால் அது முதல் நாள் சுடு சோறாக இருந்து சுவை தந்து, எஞ்சிய பிறகுதான் பயன்படுகிறது. எனவே சோறானாலும் சூடு வேண்டும். சொல்லானாலும் சூடு வேண்டும்.

தருக்கம் (விவாதம்) என்று எழும்போது அனைவரும் ஆற அமர உட்கார்ந்து பேசினால் அது எடுபடாது. எதிரும் புதிருமான கருத்துக்கள் சுடச்சுட பரிமாறப் படும்போதுதான் அதற்குச் சுவையும் சிறப்பும் கிடைக்கும். இந்தச் சூடு இருப்பதால் தான் பட்டிமன்றங்கள் சுவையாக அமைகின்றன. அப்படி இல்லாமல் போனால் அவை பாட்டி மன்றங்கள் ஆகிவிடும்.

திட்டவட்டமான ஒரு தலைப்பில் ஆளுக்கொரு பகுதியை எடுத்துக் கொண்டு இரு பக்கத்து உண்மைகள் தெரிந்தும் தருக்கமிடுவது இலக்கியப் பட்டிமன்றம் ஓரிடத்தில் கோவலன் குற்றவாளி என்று குற்றம் சாட்டும் நானே, நாளை குற்றவாளி இல்லை என்றும் தருக்கமிடுவேன்.

ஆனால் சட்டமன்றம் அப்படியில்லையே! எதிர்க்கட்சியாக இருக்கும் போது நான் ஒன்றைப் பேசிவிட்டு நாளை நான் ஆளுங்கட்சிச் சார்பில் நின்று மறுத்துப் பேசிவிட முடியாது. என் பழைய பேச்சை அப்படியே மேற்கோள் காட்டி என் முகத்தில் அடித்து விடுவார்களே!

எனவே, ஒரு கட்சியினரின் குறிக்கோள் தொடர்ந்து எதிரில் இருக்கும் கட்சியின் போக்கைச் சாடுவதுதான். எனவே ஆளும் வரிசை, எதிர் வரிசை என்று எதில் இருந்தாலும் ஒரு செய்தியை மறுக்கும்போது அல்லது ஒரு குற்றச் சாட்டை எழுப்பும்போது சூடு பறக்கிறது. இது தேவைதான். ஆனால் இன்றைய சட்டமன்றங்களின் நிலை இதுவன்று. ஒரு செய்தியை வைத்துக் கொண்டு தாறுமாறாகப் பேசி அவையில் அமளியை உருவாக்குவது என்று திட்டமிட்டே சிலர் வருவதைப் பார்க்கிறோம். இது போன்று ஓர் உள் நோக்கத்தோடு (with a motive) அவையில் பேசத் தொடங்கும் போதுதான் நிகழ்ச்சிகளில் பதற்றம் ஏற்படுகின்றது. பதற்றம் ஏற்பட்டு விடாமல் பக்குவமாகக் கொண்டு போய் விட வேண்டும் என்பதில் ஆளும் கட்சி முதல்வர் அக்கறை காட்டுவார். எதிர்க் கட்சி தரும் சூடான குற்றச் சாட்டுக்குப் பதிலடி தர ஒரே நேரத்தில் எழுந்து நிற்கும் ஆளுங்கட்சி உறுப்பினர்களை அடக்கி வைக்க முதல்வர் முயற்சி எடுப்பார். அப்போதுதான் மேலும் ஒரு மோதல் வந்து விடாமல் தடுக்க முடியும்.

'செவி கைக்கச் சொற்பொறுக்கும் தலைவனாக ஆளுங்கட்சி முதல்வர் இருந்தால்தான் அவையில் பதற்றத்தைத் தணிக்க முடியும். என் சட்டமன்ற அனுபவத்தில் இன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் கையை உயர்த்தி, மெல்லத் திரும்பிப் பார்த்தாலே போதும்; ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அப்படியப்படியே அமர்ந்து விடுவர். இதில் சட்டப் பேரவைத் தலைவர் தலையிட்டு அமைதிப் படுத்துதைவிட, முதலமைச்சரின் முழு ஆளுமையில் தான் பதற்றம் தணியும் வாய்ப்பு அடங்கியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

கடந்த பல ஆண்டுகளில் எதிர்க்கட்சியினர் கடும் பொருத்தமற்ற கூற்றுகளால் - எரிச்சலூட்டும் மொழிகளால் ஆளும் தரப்பினர் கொதிப் படைந்ததையும், எழுந்து பேசித் திருப்பிச் சாட முற்பட்டதையும் நான் நன்கு அறிவேன். பல நிகழ்ச்சிகள் முதல்வர் கலைஞர் அவர்கள் தலையிட்டு மற்றவர்களை அமர்த்தி விட்டு அவரே சூடாகவும் சுவையாகவும் கிண்டலாகவும், நகைச்சுவையோடும் விடை சொல்லி அவையை ஒரு கட்டுக்குள் கொண்டு வந்து நிறுத்தியிருப்பதை யாராலும் மறுக்க முடியாது.

மேலும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் மூத்த உறுப்பினர் பழுத்த அனுபவம் வாய்ந்த உறுப்பினர் எழுந்து பக்குவமாகப் பேசும்போதும் பதற்றம் தணிந்து விடுகிறது. அதனால் தான் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும் மூத்த உறுப்பினர்கள் சிலராவது இடம் பெறுவது அவைக்குப் பெருமையளிப்பதாக உள்ளது.

இதில் மூன்றாவது பொறுப்பு சட்டப் பேரவைத் தலைவரது ஆகும். பேரவைத் தலைவர் வெறுமனே விதிகளைச் சுட்டிக் காட்டினால் மட்டும் போதாது. சில நேரம் மிகவும் கண்டிப்பாக இருக்க வேண்டும். தேவைப்பட்டால் அமளி விளைவிக்க முற்படு வோரை அடக்கி வைக்க வேண்டும். அல்லது அகற்றி வைக்க வேண்டும். சிலர் எதிர்பாராத நிலையில் பதற்றத்தை ஏற்படுத்துவர். சிலர் திட்டமிட்டே வருவர். இந்த இரண்டிற்குமான வேறுபாட்டைப் பேரவைத் தலைவர் உணர்ந்திருக்க வேண்டும். சில செய்திகளுக்கு ஆளும் கட்சி முதல்வர் விடை சொல்லி அடக்கி விடுவார். சில இடங்களில்

பேரவைத் தலைவர்தான் தக்க விடை சொல்லி, கட்டுப்படுத்த வேண்டும். அப்போதுதான் பதற்றம் தணியும். பேரவைத் தலைவர் நகைச்சுவை உணர்வு கொண்டவராகவும் இருப்பது அவையின் பதற்றத்தைத் தணிக்கப் பெரிதும் உதவும் என்பது மறுக்க முடியாத உண்மை. 1989-91-ஆம் ஆண்டுகளுக்கிடையே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் உயர்தரச் சிந்தனைகளோடு பேரவைத் தலைவர் எனும் முறையில் நானும் அதே உணர்வோடு - நகைச்சுவையோடு உரை வழங்கி அவையைக் கலகலக்க வைத்துள்ளோம் என்பதை நினைவு கூர்கிறேன். 'வாதாபி கணபதி' எனும் தருக்கம், கன்னியாகுமரியில் 133 அடியில் சிலை வைப்பது குறித்த கேலியும் அதற்கு நாங்கள் அளித்த நகைச்சுவையான - ஆனால் கேலி செய்தவரே சிரிக்கும்படியான - உரைகளும் மறக்க முடியாதவை.

இன்று அமலி செய்யலாம் என்று வருபவர்களே அப்படிச் செய்ய முடியாமற் போகும் அளவுக்கு, முதலமைச்சரும் பேரவைத் தலைவரும் புரிந்து கொண்டு அவையை நடத்துவதுதான் பெரிய கலையாகும்.

அப்படியொரு புரிந்துணர்வு (Mutual understandint) அமையுமானால் பேரவையில் பெருமளவில் பதற்றம் தணிய வாய்ப்பு உள்ளது.



திரு. கே. வினாயகம்: ஐயா, 30 ஆம் தேதி வரும் ஆடிக் கிருத்திகை திருவிழாவிற்கு ஏராளமான யாத்திரிகர்கள் திருத்தணி முருகன் கோவிலுக்கு வருவார்கள். தயவு செய்து, குடிநீர்த் திட்டத்தை 30 ஆம் தேதிக்குள் துவக்கி வைக்க முதலமைச்சரவர்கள் இசைந்து ஒரு தேதியைக் கொடுப்பாரா?

மாண்புமிகு திரு.சி.என். அண்ணாதுரை: தம்பியின் கோயில் பற்றி அண்ணன் இவ்வளவு அக்கறை காட்டுவது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

4.7.1967

நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும். நாம் சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக்கொள்ள வேண்டும். தன்மானம் உடையவர்களாய் வாழ வேண்டும். நாமாக முயற்சி செய்து நமது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றைச் செய்தால், நாம் உயர்வது உறுதி.

– அம்பேத்கர்

# ''தனி ஒருவர்க்கு உணவில்லையெனில்''

தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இச் ஜெகத்தினை அழித்திடுவோம் என்றான் கவி பாரதி. புரட்சிக் கனல் பறக்கும் இச்சொற்றொடரில் நாம் காணும் சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைக்கு விடைதான் அறிஞர் அண்ணா அவர்கள் 1967ல் ஆட்சிப் பொறுப்பேற்றதும் கொண்டு வந்த 'படி அரிசி திட்டம்'.

1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராய் பொறுப்பேற்றதும், ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்றார். அவரது கூற்று மெய்யாகும் வகையில் தமிழ்நாட்டின் உயர்வுக்கு பல அரிய திட்டங்களைத் தந்தார்கள். அரசியல் பிரச்சினையில் ''அரிசிப் பிரச்சினை'' அசைக்க முடியாத அங்கமாக விளங்கி வந்ததை உணர்ந்த பேரறிஞர் அவர்கள் மேற்படி 'படி அரிசித் திட்டத்தை' அனைவரும் போற்றும் வண்ணம் கொண்டு வந்தார்கள். இதனுடைய நோக்கமே, ''தனியொருவர்க்கு உணவு இல்லை'' என்கின்ற நிலையை மாற்றி 'எல்லோருக்கும் உணவு' என்கிற நிலையை உருவாக்குவதே.

அண்ணா அவர்களின் வழியில் அயராது உழைத்து வரும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், உணவு உற்பத்திக்கு பசுமைப் புரட்சியையும், பால், கோழி, முட்டை உற்பத்திக்கு வெண்மைப் புரட்சியையும், மீன் உற்பத்திக்கு நீலப்புரட்சியையும், மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு செம்மைப் புரட்சியையும் கண்டார்கள்.

எழிலார்ந்த தமிழகத்தில் தனி ஒருவர்க்கு உணவு வழங்குதல் என்பதுதான் தலையாய கொள்கையாகும். அந்த வகையில் 1943-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னையில் உணவு பங்கீட்டு முறை கொண்டுவரப்பட்டு, 1943 டிசம்பர் மாதம் கோயம்புத்தூர், ஈரோடு, தாராபுரம் ஆகிய இடங்களுக்கும், 1944 ஏப்ரல் மாதம் மாநிலத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளுக்கும் கொண்டுவரப்பட்டது என்பது வரலாறாகும். மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே இந்தத் திட்டம் 54 ஆண்டுகளுக்கு முன்னரே கொண்டுவரப்பட்டது. அந்தக் காலத்தில் அனைத்து குடும்பங்களுக்கும், குடும்ப அட்டைகள் போல் அல்லாமல் நகரம், கிராமம் எனப் பிரித்தும், தற்காலிகமாக குடும்ப அட்டைகள், மாநிலத்தில் பயணம் செய்கின்ற அலுவலர்கள், புனித யாத்திரை மேற்கொள்பவர்கள் மற்றும் குடும்பத்தில் வளர்க்கப்படுகிற செல்லப்பிராணிகளுக்கும், திருமண நிகழ்ச்சிகளுக்கும் என்கிற வகையில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வந்தன என்பதெல்லாம் பழங்கால வரலாறாகத் திகழ்கின்றது.

தற்போது நிலைமையே வேறு என்கிற வகையில் சமுதாயத்தில் ஏழை, எளியவர்கள், நலிந்த பிரிவினர் இவர்களுடைய வாழ்க்கையினை முக்கிய நோக்கமாக கொண்டு, இவர்களுக்கெல்லாம் சமூக நீதி கிடைக்கின்ற வகையில், அவர்களை எல்லாம் பசியின்றிக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கோடு, பொது விநியோகத்திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு **திரு.கே.என்.நேரு**
உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்

1943-ல் தொடங்கிய இந்த திட்டம் படிப்படியாக பரிணாம வளர்ச்சி பெற்று 1964 முதல் விரிவுபடுத்தப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் 'பொது விநியோகத் திட்டத்தின் மூலம்' பயன்பெற்று வருகின்ற நிலைமை தற்போது உருவாகியிருக்கின்றது.

இந்திய உபகண்டத்திற்கே வழிகாட்டுகின்ற வகையில் பொது விநியோகத்திட்டம் முழுக்க, முழுக்க கூட்டுறவு நியாயவிலைக் கடைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாய விலைக் கடைகள் மூலம் தமிழகத்திலே செயல் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் 1 கோடியே 50 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு, 20,211 கூட்டுறவு நியாய விலைக் கடைகள், 1,091 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கடைகள், 2,028 பகுதி நேர கூட்டுறவு நியாயவிலைக் கடைகள், 179 மகளிர் கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் ஆகியவற்றின் மூலம் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பொது மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங் களை விநியோகிப்பதற்கு தேவைக்கேற்ப புதிய நியாயவிலைக் கடைகளையும், பகுதி நேர நியாயவிலைக் கடைகளையும் உருவாக்கவும், குடும்ப அட்டைதாரர்களுக்கு மாத ஒதுக்கீடான அத்தியாவசியப் பண்டங்களை மாதம் முழுவதும் தேவைப்படுகின்ற நாட்களிலெல்லாம் வழங்கு வதற்கும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்து பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் 5,000க்கும் மேற்பட்ட புதிய நியாயவிலைக் கடைகளைத் திறப்பதற்கு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்ததோடு, சொந்தக் கட்டிடம் இல்லாத நியாயவிலைக் கடைகளுக்கு புதிய கட்டிடம் கட்டித் தருவதற்கும் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். புதிய நியாயவிலைக் கடைகள் உருவாக்குவதற்கு தடை யாக இருந்த விதிமுறைகளைத் தளர்த்தி மக்களின் தேவைக்கு ஏற்ப புதிய நியாயவிலைக் கடைகளை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே உருவாக்கிக் கொள்வதற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணை வழங்கி இருக்கிறார்கள். எந்த ஒரு குடும்ப அட்டைதாரரும் தனது உரிமைப் பொருட்களை வாங்க 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் நடந்து செல்வதை தவிர்க்கும் வகையில் புதிய கடைகள் திறக்கவும் முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

ஒரு குடும்பத்தில் மூன்று நபர் இருந்தாலே அந்த குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி வழங்க வேண்டும் என்கிற வகையிலே ஆணை பிறப்பிக்கப்பட்டு, 20 கிலோ அரிசி தற்போது நியாயவிலைக் கடைகளில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய பொது விநியோகத்திட்டத்தின் மூலம், மத்திய அரசு தொகுப்பில் இருந்து தமிழகத்திற்கு ஒதுக்கீடு குறைந்துவிடாமல் இருப்பதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களுககு கடிதம் ஒன்றினை என் வழியில் கொடுக்கச் செய்து மத்திய அரசு தொகுப்பில் இருந்து 'அரிசி ஒதுக்கீடு' குறைக்கப்படாமல் பார்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒதுக்கீட்டுக்கு கூடுதலாக அரிசி தேவைப்படுகின்ற காரணத்தினால் அண்டை மாநிலங்களில் இருந்து அரிசியினை வாங்கி நியாயவிலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டை களுக்கு குறைவின்றி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு குடும்ப அட்டைகளுக்கு குறைந்த விலையில் அரிசியினை வழங்குவதற்காக ஆண்டுக்கு ஏறத்தாழ ரூ. 1,100 கோடி அரசு மானியம் வழங்கிக் கொண்டுள்ளது.

பொது விநியோகத்திட்டத்தை சீரமைத்து மேலும் ஆக்கபூர்வமான பணிகளை நிறைவேற்று வதற்காக ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று ஆய்வு செய்து அறிக்கை தந்ததன் பேரில், ''சிகப்பு, மஞ்சள், பச்சை'' ஆகிய மூன்று வண்ணங்களில் குடும்ப அட்டைகள் வழங்கும் பணி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் 1.7.97 அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது.

மாத வருமானம் ரூ. 1,250/-க்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு சிகப்பு வண்ண அட்டை தரப்பட்டு அரிசியும் மற்ற பொருட்களும் நியாயவிலையில் வழங்கப்படும்.

மாதம் ரூ. 1,250/-க்கு மேல் ரூ. 10 ஆயிரத்துக் கும் கீழ் வருமானம் உள்ள குடும்பங் களுக்கு மஞ்சள் வண்ணத்தில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு அவர்களின் விருப்பத்திற்கேற்ப அரிசியோ அல்லது அதற்கு பதிலாக மூன்று கிலோ சர்க்கரையோ அல்லது 5 லிட்டர் மண்ணெய்யோ வழங்கப்படும்.

மாதம் ரூ. 10 ஆயிரத்திற்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு பச்சை வண்ண அட்டைகள் வழங்கப்பட்டு, அரிசி தவிர்த்த பிறப் பொருட்கள் வழங்கப்படும்.

இவ்வாறு புதிய வண்ண அட்டைகள் தரப்படுவதன் மூலம் வாழ்வில் நலிவுற்றவர்கள்,

குறைந்த வருமானம் உள்ளவர்கள் மிகு பயன் அடைய வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. அதோடு போலிக் குடும்ப அட்டைகள் பரிபூர்ணமாக நீக்கப்படுகின்ற நிலைமை உருவாகிறது என்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாகும்.

தமிழகத்தை பொறுத்த அளவில் 1995-96-ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி 52 இலட்சம் டன்னாகவும் 1996-97ல் 62.74 இலட்சம் டன்னாகவும் இருந்தது. நடப்பாண்டில் 70 இலட்சம் டன் அளவிற்கு அரிசி உற்பத்தி இருக்கும் என்ற எதிர்பார்ப்போடு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்காக தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டுவருவது, நீர்பாசனத் திட்டத்தை மேம் படுத்துவது, விவசாயிகளினுடைய வாழும் சக்தியை மேம்படுத்துவது ''இரண்டாவது பசுமைப் புரட்சியை'' தமிழகத்தில் உருவாக்குவது என்கின்ற வகையிலே திட்டங்களை ஆய்வு செய்து, அறிக்கை தயாரித்து அளிப்பதற்காக டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழு அறிக்கையினை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கடந்த சில நாட்களுக்கு முன்னாள் வழங்கி இருக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையில் வேளாண் உற்பத்தித் திட்டங்கள் தமிழகத்திலே நிறைவேற்றப்பட உள்ளன.

தனிமனித வாழ்வைக் காப்பதன் மூலமே சமுதாயத்தையும், நாட்டையும் காக்க முடியும். ''தனி ஒருவர்க்கு உணவில்லையெனில் ......'' என்கிற ஐயப்பாட்டுடன் கூடிய எச்சரிக்கையை விலக்குவதற்கும், அகற்றுவதற்கும் வேலை வாய்ப்புத் திட்டங்களும், பொது விநியோகத் திட்டமும் நிறைவேற்றப்பட்டுக்கொண்டுள்ளன. எதிலும் இயலும் என்கின்ற உணர்வு மிளிர்ந்தாக வேண்டும்.

நாம் பிறந்ததெல்லாம் நமக்காகவும், பிறர்க் காகவும் என்ற உள்ளத்தை பெற்று வாழ்வதன் மூலமே நியாயத்தை நிலைப்படுத்த முடியும். பிறர்க்கு வருகின்ற துன்பத்தையும் தனது துன்பம் போல் ஏற்று பிறர்க்கு ஈயும் மனத்தோடு வாழ்கின்ற வாழ்க்கைதான் நிறைவு பெற முடியும்.

''எல்லாம் எனக்காக'' என்ற உணர்வினைப் போக்கி

''எல்லாம் நமக்காக'' என்ற உணர்வைப் பெறுகின்ற பொழுதுதான் மனிதத் தன்மை முழுமை பெறும்.

''அற்றார் அழிபசியைப் போக்குவதற்கு'' மணிமேகலைக்கு ஒரு 'அமுத சுரபி' கிடைத் திருக்கலாம். அந்த அமுத சுரபியினைப் போல் ஒரு 'அட்சயப்பாத்திரம்' நாட்டில் உள்ள அனைவருக்கும் கிடைக்குமா என்பது கற்பனையில் கூட எழமுடியாது.

அனைவரின் ஒத்துழைப்பும், விட்டுக்கொடுக் கிற மனப்பான்மையும், எல்லோரையும் வாழ் விக்கும் என்று நம்பலாம்.

''எண்ணியர் திண்ணியராயின்
எண்ணியாங்கு எய்த இயலும்''

என உணர்ந்து வாழ்வதன் மூலம், ''தனிமனிதர்க்கு உணவில்லையெனில், '' என்ற அச்சுறுத்தல் அகன்று, தனிமனிதனுக்கு உணவு இல்லை என்பது இங்கு இல்லை என உணர்த்தி இப் பவள விழா வைர விழா காணும் இவ்வேளையில் உறுதியும் பயனும் மிளிரட்டும்.

> ஏழை என்றும் பணக்காரன் என்றும் இரு வர்க்கம் இருப்பது பொதுவாகவே சமூகத்துக்குக் கேடு, ஆபத்து என்று எடுத்துக் கூறி, பாட்டாளியின் துயரைத் துடைக்கப் பாடுபட்டார்கள் சமர்தர்ம நோக்குடைய தலைவர்கள். அந்த அரும்பணியின் ஆரம்ப வேலை தொழிலாளரின் உழைப்பு, காலம், அளவு, கட்டு திட்டம் முதலாளிகளால் சூறையாடப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று தொடங்கப்பட்ட முதல் முயற்சி, மே தினம்!
>
> – அண்ணா

# குடிசையிலிருந்து அடுக்குமாடிக் குடியிருப்புக்கு

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா.

ஆம், அவருடைய கருத்தைச் செயல்படுத்தும் வகையில், தலைவர் கலைஞரின் சிந்தனையில் கண்ட திட்டம் தான் தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே முதன் முதலாக 1970 ஆம் ஆண்டில்தான் இத்திட்டம் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது.

பெரும்பாலான வளர்ந்து வரும் நாடுகளில் துரிதமாக நகர மயமாக்குதல் ஒருமுகப்படுத்தப் பட்டுள்ளதன் காரணமாக கிராமப்புறங்களில் இருந்து நகரங்களுக்கு மக்கள் வேலை வாய்ப்பினைத் தேடிக் குடிபெயர்கின்றனர். ஓர் உன்னதமான சூழ்நிலையில் வீட்டு வசதி மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும். மாநகரம் மற்றும் நகரங்களில் குடிசைப் பகுதிகள் அமைந் திருப்பது ஒரு குறிப்பிட்ட சதவீத மக்கள் ஏழ்மையான நிலையில் வாழ்வதைக் கோடிட்டுக் காட்டுகின்றது. நகரங்களில் வாழும் ஏழை மக்களால் நல்ல ஒரு வீட்டினை அமைத்துக்கொள்ள இயல வில்லை. மேலும் அவர்களுடைய குறைந்த வருமானத்தில் வாடகைக்கு வீடுகளைப் பெற இயலவில்லை. இவர்கள் அரசு மற்றும் தனியார் காலி மனைகளை ஆக்கிரமித்து குடிசைகள் அமைத்து வாழ்ந்து வருகின்றனர். கழிவுநீர் வெளியேற்றும் வசதியின்மை காரணமாக இக்குடும்பங்கள் ஆரோக்கியமற்ற சூழ்நிலையில் வாழ பழகி கொண்டுள்ளனர். நகரங்களில் நதிக்கரை மற்றும் நீர் நிலைகளுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள குடிசைகள் வெள்ளத்தின் சீற்றத்திற்கு ஏதுவா கின்றன. குடிசைப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கூரை வீடுகள் தீ விபத்துக்குள்ளாகின்றன.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் துவக்கம்:**

எனவேதான், பொது மக்களுடைய நலத்திற்கும் பாதுகாப்பிற்கும் குடிசைப்பகுதிகள் ஆபத்து விளைவிக்காமல் இருக்கவும், குடிசைப்பகுதிகளை மாற்றி அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டவும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1970 ஆம் வருடம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் நிறுவப்பட்டது. முதலில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் சென்னை நகரில் நிறை வேற்றப்பட்டன. அதன் பின்னர் படிப்படியாக தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் நகராட்சிகளுக்கும் நகர்ப் புறப் பஞ்சாயத்துக்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் குறிக்கோள்:**

முதன்மையாக வெள்ளத்தால் பாதிக்கப்படும் மற்றும் இதர பாதிப்புகளுக்கு உள்ளாகும் பகுதி களில் உள்ள குடிசைப்பகுதிகளை மாற்றி தன்னிறைவு பெற்ற சுகாதாரமான அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுதல் அல்லது பாதுகாப்பான இடங்களில் மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைத்தல்.

குடிசைகளில் வாழும் மக்களைத் தனியார் நிலச் சொந்தக்காரர்கள் வெளியேற்றுவதைத் தவிர்த்து அக்குடிசைப்பகுதி வாழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தல்.

எல்லாக் குடிசைப்பகுதிகளுக்கும் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மின் விளக்குகள், மழைநீர்க் கால்வாய், சாக்கடை வசதிகள் போன்ற பணிகள் அமைத்தல்.

குடிசை மாற்றுக் குடிசை மேம்பாட்டுப் பணிகளுக்கான அணுகுமுறைகள் கீழ்காணும் சிறப்பியல்புகளைக் கொண்டதாகும். குடிசைப்பகுதி களுக்கான பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய அவசர நிலையினைக் கருத்தில் கொண்டு, நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு குடிசை மாற்றுக் குடிசை மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப் படும்.

குடிசைப்பகுதி வாழ் மக்களுக்கு அவர்களது திருப்பிச் செலுத்தும் சக்திக்கேற்ப குடியிருப்புகள் அமைத்தல் அல்லது மேம்படுத்துதல்.

குடிசைப்பகுதி வாழ் மக்களைக் குடிசை மாற்று மற்றும் மேம்பாட்டுப்பணிகளில் ஈடு படுத்துதல்.

களமேம்பாட்டுப் பணிகளுக்கேற்ப அமைந் துள்ள குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் அமைத்தல்.

சுகாதாரமற்ற மற்றும் நெரிசலான இடங்களில் குடிசைப்பகுதிகளில் வாழும் மக்களை மாடிக் குடியிருப்புகள் அமைத்து குடியமர்த்துதல்.

மாடிக் குடியிருப்புகள் அல்லது களமேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலாத

மாண்புமிகு **திரு. க. சுந்தரம்**
பால் வளத்துறை அமைச்சர்

இடங்களில் மேம் படுத்தப்பட்ட மனைகள் அமைத்து குடியமர்த்துதல்.

மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைக்கும் திட்டங்களில் மனை உரிமம் வழங்குதல்.

இருப்பிடத்தினை மேம்படுத்திக்கொள்ளுதல் அட்கோ போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்றுக் கடனுதவி வழங்குதல் ஆகிய கோட்பாடுகளுடன் செயல்பட்டு வருவதுதான் குடிசை மாற்று வாரியம்.

சாக்கடையில், சந்துபொந்துகளில் நெளிந்து வாழ்ந்துவரும் குடிசைவாசிக் குடும்பங்கள், பிப்ரவரி 1997 வரையிலான காலம்வரை சுமார் 61,550 அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியமர்த்தப் பட்டுள்ளனர். மேலும் நடப்பு நிதியாண்டில் (1997-98) சுமார் 2000 அடிக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.

அண்டை மாநில அரசுகள் பாராட்டும் வகையில் இத்திட்டம் வேகமாய்ப் பணியைத் துவக்கி முதல் முறையாக ரூ. 5 கோடி செலவில் இத்திட்டம் துவக்கப்பட்டு அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி அவைகளில் குறைந்த வாடகையில் ஏழைகளைக் குடியமர்த்தியது.

1997-98-ஆம் ஆண்டிற்கு 45.96 கோடி ரூபாய் மூலதனச் செலவிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை ஒட்டி உலக வங்கி உதவியுடன் குடிசைப்பகுதியில் வாழ்பவர்கள் வசதிகள் மேம்பட தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி, வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் ஆரம்பிக்கப்பட்டு 76,722 குடும்பங் களுக்கு ரூ. 32.24 கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகள் அமைக்கப்பட்டு மனை உரிமம் வழங்கப் பட்டுள்ளது.

விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம் பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தும் பொருட்டு குடும்பத்திற்கு ரூ. 2000 வீதம் செலவு செய்து மேம்பாட்டு பணிகள் செய்யப்படுகின்றன.

சாலையோரங்களில் போக்குவரத்துக்கு இடை யூறாகக் குடிசையில் வசிப்பவர்களில் சுமார் 7782 குடும்பங்களை அகற்றி சென்னைக்கு அருகே மாற்று இடங்களில் குடியமர்த்தி அவர்களது வாழ்வில் ஒளியேற்றி உள்ளது.

வீட்டு வசதிப் பணிகளை மேற்கொள்ளும் அரசு நிறுவனங்கள் மேம்பாட்டு பணிகளுக்காக மேற் கொள்ளும் நிலத்தில் 5 சதவீதத்தினை நிலவங்கி அமைப்பிற்கு ஒதுக்கீடு செய்து அந்த இடங்களில் ஏழைகளைக் குடியமர்த்த ரூ. 7000 வரை செலவிட்டு அதை 15 ஆண்டுகளில் திரும்பப் பெற்றிட வழி வகுக்கப்பட்டுள்ளது.

கட்டிமுடித்த வீடுகளில் எதிர்பாராத விதமாய் ஏற்பட்ட பழுதுகளை அகற்றிட, 47,500 குடியிருப்பு களை ரூ. 14.50 கோடி செலவில் மேம்படுத்த திட்டமிடப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன. முதல்கட்டமாய் ரூ. 5 கோடியில் 22000 குடியிருப்பு கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. மற்றும் அனைத் தும் பழுதடைந்துள்ள குடியிருப்புகள் விரைவில் பழுதுபார்க்கப்பட்டு அவர்களுக்கே குறைந்த தவணைத் தொகையில் உரிமையாக்கப்படும்.

பெருகிவரும் மக்கள் தொகையை சமாளிக்க மைய அரசில் ரூ. 60 கோடி மானியம் பெற்று சென்னை நகருக்கு அருகே ஒக்கியம் - துரைப்பாக்கம் பகுதியில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் 6500 வீடுகள் கட்டப்பட உள்ளன. இந்த நிதியாண்டில் (1997-98) பணிகள் தொடங்கப்படும்.

தற்போது ஒரு குடியிருப்பிற்கான கட்டுமானச் செலவு ரூ 1,20,000 ஆகும். இக்குடியிருப்புகள், தவணை முறையில் மாதம் ஒன்றுக்கு மிகவும் குறைந்த தொகையான ரூ. 150/- வீதம் இருபது ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தி சொந்தமாக்கும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

பள்ளிக்கரணை பகுதியில் அனைத்து அடிப் படை வசதிகளான சாலை, குடிதண்ணீர் மற்றும் மின்விளக்கு வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனைகளில் சென்னை பெருநகர் துரித ரயில் போக்குவரத்துத் திட்டப்பகுதியில் வசித்து வந்த 2132 குடிசை வாழ் குடும்பங்கள் குடி யமர்த்தப்பட்டுள்ளனர்.

ஏழை எளிய, குடிசை வாழ் மக்களை, மாடிக் குடியிருப்புகளில் குடியமர்த்த வேண்டும் என்பது இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். அந்த வகையில் குடிசை மாற்று வாரியம் மிக வேகமாகச் செயல்பட்டு வருகிறது.

ஆச்சரியக் குறிகள், கொஞ்சம் வளைந்தால்
கேள்விக் குறிகள் ஆகிவிடும்!
கேள்விக் குறிகள் நிமிர்ந்தால்
ஆச்சரியக் குறிகளாகி விடும்!

கலைஞர்

# 'தொழிலகங்களில் மனித நாட்கள் இழப்பினைத் தவிர்ப்பது எப்படி?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்
*(தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)*

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு ஆணிவேராய், அச்சாணியாய், முதுகெலும்பாய் விளங்குவது அந்நாட்டின் தொழில் வளர்ச்சியே. அதனால்தான் பாரதியார், "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" எனவும், "ஆலைகள் செய்வோம், தொழிற்சாலைகள் செய்வோம்" எனவும் பாடினார்.

தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாதது தொழில் நல்லுறவு. எங்கு நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்ல உறவு உள்ளதோ அங்கு தொழிலமைதி நிலவும். எங்கு தொழிலமைதி பூரணமாக நிலவுகிறதோ அங்கு உற்பத்தியும், உற்பத்தித் திறனும் உயரும். நாட்டின் பொருளாதார நிலை உன்னத நிலைக்குயர உற்பத்தியும் உற்பத்தித் திறனும் மிக அவசியமான ஒன்றாகும்.

வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. வளர்ச்சியடைந்த நாடுகளுடன் இந்தியாவினை ஒப்பிட்டு நோக்கும்போது நாம் பொருளாதார ரீதியிலும், தொழில் வளர்ச்சியிலும் பின்னடைவில் நிற்கிறோம். ஒரு நாடு தொழில் உற்பத்தியில் முழுமையடையும்போது அது தன்னிறைவு பெற்ற நாடாக அமைகின்றது. வளர்ந்து வரும் நாடுகளில் ஏற்படும் தொழில் உற்பத்திக் குறைவு பொருளாதார முன்னேற்றத்தை வெகுவாக தடைப்படுத்திவிடும். நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் உறவில் விரிசல் ஏற்பட்டால் உற்பத்திக்கு ஊறு விளையும். இவ்விரிசல் வேலை நிறுத்தமாகவும் வெடிக்கும். கதவடைப்பாகவும் அவதாரமெடுக்கும். இது எவ்வகையானாலும் பங்கப்படுவது உற்பத்தியே. வீணாவது மனித நாட்களே.

தொழில் நிறுவனங்களில் ஏற்படும் வேலைநிறுத்தங்களும், கதவடைப்புகளும் நாட்டின் தொழில் உற்பத்திக் குறைவுக்கு முக்கியக் காரணமாக அமைகின்றன. உற்பத்திக் குறைவு என்பது வேலையளிப்பவருக்கு மட்டும் இழப்பினை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, தொழிலாளர்களுக்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் இழப்பினை ஏற்படுத்துவதாக அமைகிறது. நாட்டில் எங்கோ ஒரு மூலையில் ஒரு தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் / கதவடைப்பு ஏற்படும்போது அதனால் ஏற்படும் உற்பத்திக் குறைவு நாட்டின் மொத்த உற்பத்தியில் ஒரு பெரிய பாதிப்பினை ஏற்படுத்துகிறது.

பன்னாட்டு தொழிலாளர் கல்வி நிலையம் (International Institute of Labour Studies) "தொழில் உறவு" என்பதனை "உற்பத்தியில் சமுதாய உறவு" (Social Relations in Production) என்று விளக்குகிறது. ஆரம்ப காலத்தில் வேலையளிப்பவர் – வேலையாள் என்ற உறவு தொழில் உறவாகக் கருதப்பட்டபோதும், நாளடைவில் தொழிலாளர்கள் தங்களுக்கென தொழிற்சங்கம் என்ற அமைப்பினை நிறுவி அதன் மூலம் வேலையளிப்பவருடன் தொழில் உறவினை வளர்த்துக் கொண்டனர். வேலை நிறுத்தங்கள் / கதவடைப்புகள் பெரும்பாலும், சம்பளம் மற்றும் படிகள், போனஸ், ஆட்குறைப்பு, விடுப்பு, வேலைநேரம் போன்றவற்றினாலும், பல்வேறு தொழிற்சங்கங்களுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளினாலும் ஏற்படுகிறது. இத்தகைய வேறுபாடுகளைக் களையவும், தொழிலாளர்களுக்குத் தரும் சட்டரீதியான சலுகைகள் குறிப்பிட்ட காலத்தில் சென்றடையவும், பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை அரசு இயற்றியுள்ளது. இச்சட்டங்கள் தொழிலாளர் துறை அதிகாரிகளால் தீவிரமாக அமல்படுத்தப்படுவதால் தொழிலாளர்களிடையே ஏற்படும் அதிருப்தி வெகுவாகக் குறைக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் வேலையளிப்பவருக்கும், வேலையாட்களுக்கும் இடையே நிலவும் உறவு மேலும் பலப்படுத்தப்படுகிறது.

தொழில் அமைதியின்மையையும் அதனால் ஏற்படும் மனித நாட்களின் இழப்பையும் தடுக்க 1947ல் தொழிற் தகராறு சட்டம் இயற்றப்பட்டது. இந்தியக் குடியரசு சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் ஆகி பொன்விழா காணுகிறது. தொழிற்தகராறு சட்டமும் இந்த ஆண்டில் 50ஆம் ஆண்டை அடைந்து பொன்விழா காணுகிறது.

இத்தகைய தொழிற் தகராறு சட்டத்தின் நோக்கமே தொழிற்தகராறுகளை விசாரித்து நிர்வாகம் மற்றும் தொழிலாளர்கள் ஆகிய இருதரப்பினரிடையேயும் நிலவும் கருத்து வேறுபாடுகளைக் களைந்து தொழிலமைதியை நிலைநாட்டுவதேயாகும். இந்நோக்கத்தை நிறைவேற்றும் முகத்தான் தொழிற்தகராறு சட்டம் பல்வேறு அமைப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது. நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களே பிரச்சினைகளை எவரின் தலையீடுமில்லாமல் (அ) நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தும் கூட்டுபேர முறை; (ஆ) சமரச அலுவலர்கள் முன்பு பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கும் முத்தரப்பு பேச்சுவார்த்தை முறை; இவ்விரு முறைகளிலுமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை என்றால், (இ) இருதரப்பினரும் தாமே விரும்பி நியமிக்கும் நடுவர் தீர்ப்பின் மூலமும் தீர்வு காணும் முறை; (ஈ) தொழிலாளர் நீதிமன்றம் அல்லது தொழிற் தீர்ப்பாயம் மூலம் தீர்வு காணும் முறை ஆகியவையாம் இவை.

தமிழகத்தில் சமரசப் பேச்சுவார்த்தை மூலம் பெரும்பான்மையாக தொழிற்தகராறுகளுக்குத் தீர்வு காணப்பட்டு மனித நாட்கள் இழப்பு தவிர்க்கப்படுகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முத்தரப்புப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளை தீர்க்கும் முறை தலைசிறந்து விளங்குகிறது. சட்ட அறிவையும், சமரச யுக்திகளையும் தன்னகத்தே கொண்டு தமிழக அரசின் சமரச அலுவலர்கள் தம் பணியைத் திறம்படச் செய்து வருகிறார்கள். 1996-ல் பெறப்பட்ட மற்றும் ஏற்கெனவே நிலுவையில் இருந்த சுமார் 11,777 தொழிற்தகராறுகளில் சுமார் 6000 தொழிற்தகராறுகள் வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டு தொழிலமைதிக்கு வழிகோலப்பட்டுள்ளது.

டெக்ஸ்டைல்ஸ், சிமெண்ட், சர்க்கரை, தோல் பதனிடும் தொழில், இன்ஜினியரிங் போன்ற அமைப்பு ரீதியான தொழில்களில் பலம் பொருந்திய தொழிற்சங்கங்கள் இயங்குவதால், சட்ட நுணுக்கங்கள் முழுதும் அறிந்த நிலையில் அச்சங்கங்கள் தொழிலாளர்களை முறையாக வழிநடத்திச் செல்கின்றன. மேலும், அந்நிறுவனங்களில் ஒர்க்ஸ் கமிட்டி, தொழிலாளர் பிரதிநிதிகளும், நிர்வாகப் பிரதிநிதிகளும் அடங்கிய கூட்டுக்குழு (Joint Management Council) செயல்பட்டு வருவதாலும், இத்தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களிடையே அவ்வப்போது ஏற்படும் கருத்து வேறுபாடுகள் அவ்வப்போதே பேசித் தீர்க்கப்படுவதால், தொழில் உறவு இந்நிறுவனங்களில் சுமுகமாக உள்ளது. ஆனால், அமைப்பு ரீதியற்ற தொழில்களில் இத்தகைய நிலை இல்லை. முறையாகத் தொழிலாளர்களை வழிநடத்திச் செல்ல பலம் வாய்ந்த தொழிற்சங்கங்கள் செயல்படாததால், அத்தொழில் நிறுவனங்களில் தொழில் அமைதி பாதிக்கப்படுகிறது. அமைப்பு ரீதியற்ற தொழில்களில் தொழில் அமைதி பாதிக்கப்பட்டு, வேலைநிறுத்தம், கதவடைப்பு போன்றவற்றால், உற்பத்திக் குறைவு ஏற்படுவதுடன் ''மனித் நாட்கள் இழப்பு'' அதிகம் ஏற்படுகிறது.

1996-ம் ஆண்டில் வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பு காரணமாக ஏற்பட்ட மனித இழப்பு நாட்கள் முறையே 11.18 இலட்சங்கள் மற்றும் 5.34 இலட்சங்களாகும்.

தொழிற்தகராறு சட்டப்படி சமரச அதிகாரிகள் மாவட்ட வாரியாக நியமிக்கப்பட்டுள்ளதால், வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பு சம்பந்தப்பட்ட தொழிற்தகராறுகளை இத்துறை அலுவலர்கள் கையாளுவதோடல்லாமல், 1965-ம் வருட போனஸ் பட்டுவாடா சட்டம், 1948-ம் வருட குறைந்தபட்ச ஊதியச்சட்டம் போன்ற பல்வேறு தொழிலாளர் சட்டங்கள் திறமையாக அமல்படுத்தப்பட்டு வருவதாலும், 'மனித நாட்கள் இழப்பு' வெகுவாகக் குறைந்துள்ளது.

ஒரு நிறுவனத்தில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த சங்கங்கள் இயங்குவதால், அரசியல் ரீதியான காரணங்களுக்காக உற்பத்திக் குறைவும், மனித நாட்கள் இழப்பும் ஏற்பட வாய்ப்புள்ளது. தொழிற்சங்கங்களில் ஏற்படும் உள்பூசல்கள் காரணமாகவும் உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது.

தொழில் உறவு சீர்பட ''ஒரு தொழிற்சாலையில் ஒரு தொழிற்சங்கம்'' என்ற நிலை உருவாகும் தருணத்தில் இத்தகைய உற்பத்தி இழப்பு, மனித நாட்கள் இழப்பு குறையவும், சங்கத்தின் கூட்டுபேரம் (Collective Bargaining) அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

மேலும் அமைப்பு ரீதியான மற்றும் அமைப்பு ரீதியற்ற தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அந்தந்தத் தொழில் நிறுவனங்களிலோ அல்லது மாவட்டவாரியாகவோ பயிற்சி நிலையங்கள் மூலமாக முறையான பயிற்சிகள் அளித்தோமானால், தொழிலாளர்களின் கடமைகள் மற்றும் உற்பத்தியில் அவர்களின் பங்கு ஆகியவைகளைத் தெளிவாக அறிந்துகொள்வதோடு மட்டுமல்லாது, தொழிலாளர் நலச் சட்டங்களை முறையாகத் தெரிந்துகொள்வதால் நிறுவனத்தில் வேலை அளிப்பவரோடு சுமுகமான உறவு ஏற்படுத்திக்கொள்ளவும், நிறுவனத்தில் ஒழுங்கீனம் குறையவும் வாய்ப்புள்ளது.

பொதுவாக, பெரும்பான்மையான தொழிலாளர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து எழும் தொழிற் பிணக்குகளினால்தான் மனித இழப்பு நாட்களை ஏற்படுத்தும் சூழ்நிலை உருவாகிறது. எடுத்துக்காட்டாக, சம்பள உயர்வு பிரச்சினை, போனஸ் பிரச்சினை, பணி நிலைமை மற்றும் வேலைப்பளுப் பிரச்சினைகளினால்தான் தொழில் அமைதி பாதிக்கப்படுகிறது. தமிழகத்தில் இம்மாதிரிப் பிரச்சினைகளுக்கு தொழில் ரீதியாகப் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காணப்பட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது. ''வருமுன் காப்போம்'' என்பதற்கிணங்க இவ்வொப்பந்தங்கள் முடியும் தருவாயில் பேச்சுவார்த்தை மேற்கொண்டு கருத்து வேறுபாடு ஆரம்பத்திலேயே களையப்பட்டு மீண்டும் ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது. சர்க்கரை ஆலைகள், பஞ்சாலைகள், தேயிலைத் தோட்டத் தொழில்கள், பீடி சுற்றும் தொழில், தோல் பதனிடும் தொழிற்சாலைகள், பனியன் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பல இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவை அனைத்திலும் தொழில் ரீதியாக சம்பள உயர்வு, போனஸ் போன்ற பொதுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது. இவை மூலம் 'மனித இழப்பு நாட்கள்' தவிர்க்கப்பட்டு உற்பத்தியும் உற்பத்தித் திறனும் உயர்த்தப்படுகிறது.

கலைஞரின் தலைமையில் உள்ள தி.மு.க. ஆட்சியில் தொழில் நல்லுறவு எங்கும் சிறப்பாக இருக்கிறது. மனித இழப்பு நாட்கள் குறைக்கப்பட்டு உற்பத்தியும் உற்பத்தித் திறனும் பெருகிவருகிறது.

**திரு. மு. செல்வராஜ்:** நான் கேள்விப்பட்ட முறையிலே, டெண்டல் ஆஸ்பத்திரியிலே ஒரு தொழிலாளி, கண்டக்டரோ, டிரைவரோ, சென்றபோது, அவரது பல்லைப் பிடுங்கி விட்டார்கள். பிறகு, அத்தொழிலாளியை எங்கு வேலை செய்கிறார் என்று கேட்டதற்கு அவர் பல்லவன் டிரான்ஸ்போர்ட் என்று சொன்னவுடன், உனக்கு இங்கே அனுமதி கிடையாது, வெளியே போ என்று சொல்லி, அத்தொழிலாளிக்கு வீங்கி, அவர் வெளியிலே போய் வேறிடத்தில் மருத்துவம் பார்த்திருக்கிறார். அதற்காக ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன.....

**திரு. ரா. உமாநாத்:** பல்லவன் தொழிலாளர் என்பதால் பல்லைப் பிடுங்கி விட்டு விட்டார்களா............ *(சிரிப்பு)*

*10.3.1978*



# தமிழகத்தில் வணிக வரிகள் வரலாறு

மாண்புமிகு திரு.வே. தங்கபாண்டியன்,

வணிகவரித் துறை அமைச்சர்

ஒரு நாட்டில் பல்வேறு நலத் திட்டங்களையும், வளத்திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு பொருளாதாரம் மிகவும் தேவைப்பட்டதாகும். அத்தகைய பொருளாதாரத்தை உள்நாட்டிலேயே பெருக்கிக்கொள்வது, வெளிநாட்டு வாணிபத்தி லிருந்து பெருக்கிக்கொள்வது என்ற முறையில் உலக அரங்கத்தில் பண்டைக்காலம் தொட்டு நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. வாணிபம், வணிகம் இவற்றின் மீது வரிவிதிப்பதன் மூலம் நிதி ஆதாரத்தைப் பெருக்குவது தவிர்க்க முடியாததாகக் கருதப்படுகிறது. வரி பெறுகிறபொழுது எந்த ஒரு பாதிப்பையும் தனிமனிதனுக்கோ, சமுதாயத் திற்கோ விளைவித்துவிடக்கூடாது என்பது தமிழகத் தைப் பொறுத்த அளவில் பண்டைக்காலம் தொட்டு நடைமுறைப் படுத்துகின்ற அணுகுமுறையாகும்.

தமிழகத்தைப் பொறுத்த அளவில் 1939 ஆம் ஆண்டில் முறையாக வணிகவரி வசூலிப்பதற்குரிய சட்ட முன்வடிவினை சென்னை ராஜதானியின் பிரதமராக இருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்களால் சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்டது. அவ்வாறு கொண்டுவரப்பட்ட சட்டமுன்வடி வினை எதிர்க்கின்ற ஒரு சூழ்நிலை இருந்ததால் குழு ஒன்று அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கப்பெற்று தகுந்த திருத்தங்களுடன் 6 திங்கள்கள் கழித்து மீண்டும் சட்டப்பேரவையில் நிறை வேற்றப்பட்டதாக வணிகவரி வசூல் குறித்த வரலாறு பகர்ந்து கொண்டிருக்கிறது. 1939-ஆம் ஆண்டு மே 13-ஆம் நாள் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட வணிகவரி வசூல் சட்டம் மேதகு ஆளுநர் அவர் களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1939-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29-ஆம் நாள் அரசுப் பதிவேட்டில் வெளியிடப்பட்டு 1939-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ஆம் நாள் முதல் அமுல் படுத்தப் பட்டிருக்கிறது.

1939-ஆம் ஆண்டு 1/2 விழுக்காடாகவும் 1940 முதல் 1943 செப்டம்பர் மாதம் வரை 1/4 விழுக்காடாகவும், அதன்பிறகு படிப்படியாக 5 விழுக்காடாகவும் பொது பலநோக்கு விரிவிதிப்பு முறையில் 15 விழுக்காடாகவும், ஒரு முனை விரிவிதிப்பில் பல பொருட்களும், மேல்நாட்டு மதுவுக்கு 50 விழுக்காடாகவும் படிப்படியாக விற்பனை வரிவிதிப்பு பெருகிவந்த நிலை. 1939-40 ல் வணிகவரி வருவாய் ரூ. 34.72 இலட்சமாக இருந்தது. 1986-87ல் ரூ. 937.47 கோடியாக வணிகவரி பெருகியது. தற்பொழுது தமிழகத்தின் வரிவருவாயில் 70 விழுக்காடு அளவிற்கு வணிகவரி மூலமாகவே நிதி கிடைக்கிறது என்பது தெளிவாகும். தமிழகத்தில் மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இத்தகைய வரிவசூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

நாடாளுமன்றத்தின் மேலவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் வரிவிதிப்புக் கொள்கை குறித்து கருத்துத் தெரிவிக்கையில் மக்களின் நலம் பேணுவதற்கும், நாட்டில் வளத்தை உருவாக்குவதற்கும், வருமானவரியும், வணிக வரியும் விதிக்கப்படுவதாக இருந்தபோதிலும், செல்வம் மிகுந்தவர்களிடம் வரி மூலம் நிதி பெற்று, வறியவர்கள் வாழ்வை வளப்படுத்துவதில் அக்கறை காட்ட வேண்டும் என வலியுறுத்திக் கூறியிருக் கிறார்கள். தமிழகத்தில் கிடைக்கின்ற வணிகவரி தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்துவருகிறது என்பது வெள்ளிடைமலை.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1996-97-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை சட்டப்பேரவையில் அறிமுகம் செய்து ஆற்றிய உரையில் வரிவிதிப்புக் கொள்கை யில் பெரும் புரட்சியை உருவாக்கிய தோடு,

வணிகவரியைத் தருகின்ற வணிகர்களின் ஏகோபித்த ஆதரவையும், பெற்றுத் தரக்கூடிய வகையில் தமிழகத்தில் வரிவிதிப்புக் கொள்கையில் ஒரு புதிய சகாப்தம் உருவாக்கப்பட்டது என்பதை நாடு நன்கு அறியும். 1996–இல் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தூய்மையான ஆட்சி, நேர்மையான நிர்வாகம் இவற்றைத் தமிழக மக்களுக்கு அளிப்பதே அரசின் கொள்கை என்று அறிவித்ததோடு, தொழில் வளர்ச்சியும், வாணிக முன்னேற்றமும், ஒருசேர வளர வழிகண்டார்கள். இத்தகைய வளர்ச்சிக்கு நிலையான சூழ்நிலை உருவாக, புதிய சிந்தனை யோடு தொலைநோக்கு வரிக் கொள்கைதனை உருவாக்கித் தந்தார்கள்.

தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தி, உற்பத்தியைப் பெருக்குவது; உற்பத்தியான பொருள் களுக்குச் சந்தையை உருவாக்குவது; நுகர்வோரை சங்கடப்படாமல் காப்பாற்றுவது; விதிக்கப்பட்ட வணிகவரி ஏமாற்றப்படாமல் அரசின் கருவூலத்திற்கு வரச்செய்வது; இவற்றிற்குச் சட்டப்படியும் மனிதாபி மான அடிப்படையிலும் அணுகுமுறையை மேற் கொள்வது; என்கின்ற முறையில் அறிவியல் பூர்வமாக விற்பனை வரிவிதிப்பில் பல சீர்திருத் தங்களை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்தார்கள் என்பது மிகவும் பெருமைக்குரியதாகும்.

1989-ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒருமுனை வரியை அறிமுகப்படுத்தினார்கள். மீண்டும் தற்பொழுது ஒருமுனை வரியை எல்லாப் பொருள்களுக்கும் கொண்டுவந்து வணிகர்களுடைய கனவை நனவாக்கினார்கள்.

வணிகவரிச் சீர்திருத்தம் 6 முக்கிய நோக்கங் களின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக் கிறது.

வரிவிகிதங்களை பெருமளவு வெளிப்படை யானதாகச் செய்தல்; வரிவிதிப்பு மற்றும் வரி வசூலை எளிமையாக்குவது.

வரிவிகித அமைப்பையும் படிமுறையையும் சீரமைப்பது.

வரிவிதிப்பில் மிக நவீன முறைகளையும், புதிய நடைமுறைகளையும் பின்பற்றுவது.

சொந்த மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பது.

உள்ளூர்த் தயாரிப்பு மற்றும் கொள்முதலை ஊக்கப்படுத்துவது.

வரிவிலக்கு, இணக்கவரி, சுயவரி விதிப்பு முறை என்கிற வகையில் சிறு வணிகர்களுக்குச் சலுகை அளிப்பது.

வீட்டுக்குத் தேவையான பொருள்கள் மீதான வரியைக் குறைப்பது என்கிற வகையில் சீர்திருத்தங் களைக் கொண்டுவந்து 1996-97–ஆம் ஆண்டில் பல்வேறு பொருள்களுக்கு வரியைக் குறைத்தும், கிட்டத்தட்ட 414 கோடி ரூபாய் அளவிற்கு வரிச்சலுகைகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கி சிறப்புச் செய்ததோடு தமிழகம் முழுவதும் அனைத்துப் பொருள்கள்மீதும் கூடுதல் மேல்வரியையும் அறவே நீக்கி ஆணை பிறப்பித்தார்கள் என்பது மிகவும் சிறப்புக்குரிய தாகும்.

விற்பனைவரி அமைப்பு முறையில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கும் அதன் நடைமுறையை எளிமையாக்குவதற்கும் விற்பனை வரிச் சீர்திருத்தக் குழு அமைத்து,அந்தக் குழுவினு டைய பரிந்துரைக்கேற்ப 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பல்வேறு பொருள் களுக்கு வரிவிலக்கும், பல்வேறு பொருள்களுக்கு வரிக் குறைப்பும் செய்திருக்கிறார்கள். இதன்மூலம் ரூ. 40 கோடி அளவிற்குக் கூடுதலாக வரிச்சலுகைகள் தமிழகத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் ஆண்டொன்றுக்கு வரிச்சலுகை மட்டும் ரூ. 454 கோடி அளவிற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டிருக் கிறது என்பது வணிகப் பெருமக்களுக்கும், நுகர்வோருக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி ஆகும்.

தமிழகத்தில் பல புதிய படைப்புகளை அரசுத் துறைதோறும் உருவாக்கிய பெருமை முதலமைச்சர் கலைஞர் அவர்களையே சாரும். உணவுப் பொருள் வாணிபக் கழகம், குடிசைமாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இதுபோன்ற எண்ணற்ற புதிய துறைகளை மக்களின் நல்வாழ்வுக்காக உருவாக்கியவர் நம்முடைய முதல்வர் கலைஞர் ஆவார்கள். அந்த வகையில் வணிகவரித் துறையிலும் அவர்கள் உருவாக்கிய பெருமைமிகு திட்டங்கள் பல உண்டு.

தமிழ்நாடு அரசின் வரி வசூலில் 70 சதவீதம் ஈட்டித்தரும் வணிகவரித் துறைக்கு வணகவரியினை நல்கும் வணிகர்களின் நலனில் அக்கறைகொண்டு, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 1989-ஆம் ஆண்டு மே திங்களில் வணிகர் நல வாரியம் என்ற வாரியத்தை அமைத்தார்கள். இவ்வாரியம், வாரியத்தின் உறுப்பினர்களாக உள்ள பொருள் ஈட்டும் நபர் இறந்தால் அவர்களுக்கு குடும்ப நல

உதவிகள், இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சை ஆகியவற்றிற்கு மருத்துவ உதவிகள், நலிவுற்ற உறுப்பினர்களின் குழந்தை களின் கல்லூரி, பாலிடெக்னிக் படிப்புகளுக்கு உதவிகள் போன்ற பல உதவிகளை செய்துவருகிறது. தற்பொழுது இவ்வாரியத்தில் மொத்தம் 23,237 பேர் ஆயுட்கால உறுப்பினர்களாக உள்ளனர்.

1939-ஆம் ஆண்டில் மிகக் குறைந்த அளவில் ஒரு பைசா வரியிலிருந்து இன்றையதினம் வருவாய் வாயில்களில் முதலிடம் பெற்று மக்களின் நலம் வளம் பேணுகின்ற மகத்தான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மிகுந்த வாய்ப்பாக வணிகவரி இருந்துவருகிறது. தமிழகத்தில் பல்வேறு சிறப்புத் திட்டங்களை மக்களின் நலம் பேணுவதற்காக நிறைவேற்றித் தருவதற்கு ஆக்கபூர்வமான நிதி ஆதாரமாக வணிகவரி திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் வணிகவரி விதிப்பிலும், வரி விலக்கும், வரிக் குறைப்பும் செய்யப்பட்டு, வாங்கு வோர் சக்தியும் பேணப்பட்டுவருகிறது. நிறை யறிந்து, முறைசெய்து, மக்களைக் காப்பாற்று வதற்கான தேவைகளை நிறைவுசெய்வதற்காக தமிழகத்தில் வரிமூலம் கிடைக்கின்ற நிதி ஆதாரத் தில் 70 விழுக்காட்டுக்கு மேல் வணிகவரி வழங்கி முதலிடம் பெற்றுத் திகழ்கிறது என்பது மிகையல்ல.

